திராவிடநாடு

11—8—57 | வார வெளியீடு | விலை 0—2—6

கண்ணீரால் நனைந்த ஏடு!

[கழுகு மலையான்]

ஏடெடுத்தேன் பாட் டெழுத
    என் வீட்டின் முன்பு
எச்சில் உண வானாலும்
    இசைந் துண்ணும் ஏழை
ஓடெடுத்தே வந்(து) ஏங்கி
    ஓல மிட்டான்; "அம்மா
ஒரு கவளம் சோறிட்(டு) என்
    உயிர் காப்பீர்" என்றான்.
பீடெடுத்த பைந்த மிழர்
    பிச்சைக்கும் கெஞ்சும்
பிற்போக்கு நிலைகண்(டு) என்
    பெரு நெஞ்சம் வாடும்
காடெடுத்த வறுமைத் தீ
    கண்டழுத எந்தன்
கண்ணீரால் நனைந்ததுவே
    கையெடுத்த ஏடு.

"போங்கள்! போங்கள்!!"

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [11-8-57] தனிப் பிரதி 16-காசு [இத

"போங்கள்! போங்கள்!!" என்று கூச்சலிட்டனராம். தினமணியார், மறந்துவிடாமல், தெரிவிக்கிறார், உலகுக்கு.

பார்லிமெண்டை விட்டு, பாராளுமன்ற எதிர்க் கட்சி உறுப்பினர்கள், வெளியேறும் போதுதான், இவ்வண்ணம் சத்தம் போட்டனராம்

எதிர்க் கட்சியினர் சபையை விட்டு வெளியேறியது, ஏனிவ்வளவு ஆனந்தத்தை அளித்ததோ, அகிம்சையின் பேரால் ஆட்சியரங்கு வந்தோருக்கு! பலத்த 'மெஜாரிடி' உண்டு காங்கிரசுக்கு—பலரைப் பேச அனுமதியாத வசதியும் இருக்கிறது. இருந்தும், எதிர்க்கட்சியினர் இல்லாது, காரியங்களைக் கவனிப்பதில், களிப்புப் பிறக்கிறது காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு!!

பலமான எதிர்க் கட்சி வேண்டும்—அதுபோதுதான் உண்மையான ஜனநாயகம் மூழக்க முடியும் என்கிறார், பண்டித நேரு அவர்கள். ஆனால், எதிர்க் கட்சி, சபையைவிட்டு வெளியேறுவதோ ஆனந்தத்தையும் அகமகிழ்ச்சியையும் அள்ளி வழங்குகிறது தேசியபுரியினருக்கு — போங்கள்! போங்கள்!! என்று புளகாங்கிதத்துடன் தெரிவித்திருக்கின்றனர்.

ஆட்சியாளர்தம் செயலை இடித்துக் கூறித் திருத்தத்தான் எதிர்க் கட்சிகள், 'லாலி' பாடுவதற்காக அல்ல. அப்படிப்பட்ட எதிர்க்கட்சிகளை மதிப்பதும், அவர்தம் கருத்துக்கு மதிப்புத் தருவதும் மக்களாட்சியின் மாண்பு.

பாராளும் சபையைவிட்டு எதிர்க் கட்சியினர், வெளியேறுகின்றனர் என்றால், அது ஒரு வேடிக்கையான சம்பவமல்ல! சாதாரண நிகழ்ச்சியுமல்ல!! எவ்வளவோ உரைத்தோம், கேட்கவில்லை—வாதாடினோம், ஏற்கவில்லை—மனதார வேண்டினோம், மறுக்கப்பட்டது—இனியும் எமது மனம் ஒப்பவில்லை, இந்தக் காரியத்தைச் செய்யும்போது எங்களுக்கு சபையில் இருக்கவும் மனம் இடங்கொடுக்கவில்லை, என்பதுதான் பொருள். ஜனநாயகத்தில் இப்படி ஒரு வெளியேற்றம் நடப்பது, ஆளும் கட்சியால் கவலையோடு கவனிக்கப்பட வேண்டிய கட்டமாகும். ஆனால், காங்கிரஸ் உறுப்பினர்கள், களிக்கும் கட்டமாகக் கருதி, 'போங்கள்! போங்கள்!!' என்றிருக்கிறார்கள்.

ஜப்பானியப் பாராளுமன்றத்திலே, உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டதாகவும், நாற்காலிகளையும் மேசைகளையும் தூக்கி வீசியதாகவும் ஒரு சில ஆண்டுகளுக்கு முன், செய்தி வந்தது. அதுபோல, அட்டகாசமோ அருவருப்போ கொள்ளக்கூடிய விதத்திலே, நடந்து கொள்ளவில்லை, இங்குள்ள எதிர்க் கட்சியினர். கலகம் விளைவிப்பதையே வேலையாகக்கொண்டவர்கள் என்று இழித்தும் பழித்தும்பேசப்படும் கம்யூனிஸ்டுகள்கூட, ஜனநாயகவாதிகளாகத்தான் நடந்து வருகிறார்கள். இருந்தும், காங்கிரஸ்காரர்கள் "போங்கள்! போங்கள்!!" என்று கூவினர் எனின், அவர்தம் உள்ளத்தில், எதிர்க்கட்சிகளென்றாலே ஏற்பட்டிருக்கும் எரிச்சலும், அவைகள் எதுசொன்னாலும் ஏறுக்குமாறு செய்யவேண்டும் என்று வளர்ந்திருக்கும் சுபாவமுமே, விளங்குகிறது.

ஏன் வெளியேறினார்கள் எதிர்க்கட்சியினர்! சுதந்திரவிழா கொண்டாடாதீர், என்று சொல்லியா! நேருபிரான் ஆண்டுக்குப் பலதடவை அந்நிய நாடுகளுக்குப் பறக்கிறாரே, அதைக் கண்டித்தா? ரஷ்யா வசம் ஆட்சியை ஒப்படைக்காமல் ஏன் தயக்கம் காட்டுகிறீர் — என்று கேட்டா? அல்ல! அல்ல! தவிப்போரைத் தடிகொண்டு தாக்காதீர்—வறுமைப் பாம்பால் கடிபடுவோரின் வாய்க்குப் பூட்டும், கால்கைகளுக்கு விலங்கும் போடாதீர்—வாழப்பிறந்தோம்—வாழச்செய்வோம், அனைவரையும்—என்று கூறினர், எதிர்க்கட்சியினர்! இது குற்றமென்று கோணல் மதியினரும் கூறார்—கோலோச்சும் நேரு அவர்களும் தவிப்போரின்கண்களிலிருந்து வழியும் கண்ணீரைத் துடைப்பதே தன் வாழ்நாளின் இலட்சியம் எனக்கூறுகிறார்—அதற்காகவே சோஷியலிசபாணியில் பாதை போடுகிறேன் என்கிறார். இதனை, எடுத்துரைத்தனர், எதிர்க்கட்சியினர். இந்தியாவை அமெரிக்காவில் கொண்டுபோய் வைக்கவேண்டும் என்று கோரவில்லை! இந்து மகா சமுத்திரத்தை இமயமலையின்மீது கொண்டுபோய் வையுங்கள் என்றும் கேட்கவில்லை!! மனிதர்கள் செய்யக்கூடிய காரியங்களைச் செய்யுங்கள்—என்கிறார்கள். செய்யத் தவறிடும்போது ஏனிதைச் செய்யக்கூடாது, என்று கேட்கிறார்கள்.

உலக அரங்கிலே கொரியாவுக்கும், சைப்ரசுக்கும், அல்ஜீரியாவுக்கும், நியாயம் தேடித் தரக் கிளம்பும் சகல கலா வல்லவரான நேரு அவர்களால், இவர்தம் கோரிக்கைகளுக்கா பரிகாரம் காண

(16-ம் பக்கம் பார்க்க)

தண்டலம் மாநாடு

மா. கி. தசரதன்

சென்ற கிழமை காஞ்சிபுரப் பகுதியில் ஒரே பரபரப்பு—தேர்தல் நேரத்திலேகூட இப்படி இருந்ததில்லையே என்று சொல்லக்கூடிய விதத்தில் பொதுநல மாநாட்டின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நகர் எங்கும் அதே பேச்சுதான். பொதுநல மாநாடாமே—காமராசர்கூட வருகின்றாராமே — தண்டலத்திலாமே — வழி எப்படி — என்று பலர் எண்ணி இருந்தனர். தொகுதியின் குறைகளைக் கேட்டறிந்து 'மனுக்கள்' எழுதுவதில் தொண்டர்கள் ஈடுபட்டு இருந்தனர். கிராமத்துப் பெரியவர்கள் திருவிழாக்கோலம் காணப்போகும் சிறுவர்களைப் போல் ஆவல் கொண்டிருந்தார்கள். பொதுத் தொண்டில் ஈடுபாடு கொண்டவர்கள் ஆர்வத்தோடு இருந்தார்கள்.

ஆகஸ்டு திங்கள் 5 - ஆம் நாள் மாலை 5 மணிக்குத்தான் மாநாடு. ஆனால் நண்பகலிலேயே தண்டலம் செல்லும் பாதையில் சாரி சாரியாக மக்கள் செல்லத் தொடங்கினர்.

தண்டலம் போகும் பாதை என்று சொல்லிவிட்டேன். ஆனால் அந்தப் பாதை எது என்பதுதான் பலர் யார் யாரையோ கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதாயிற்று. வழிகள் கிளைக்கின்ற இடங்களில் நின்றிருந்த போலீஸ்காரர்கள் அன்று 'இதோ இந்தப் பாதைதான் — ஆமாம் போங்கள்' என்று சொல்லிச் சலித்துப் போயிருப்பார்கள்.

ஏனென்றால், கனம் காமராசரை வரவேற்கின்றபோது அண்ணா சொன்னதைப்போல் அது ஒரு "வழி கண்டுபிடிக்க முடியாத சிற்றூர்."

சரியாக 5 மணிக்குக் கனம் காமராசர் அவர்கள் காஞ்சி நகர் மேற்கு எல்லையில் இருக்கும் 'வெள்ளை கேட்' என்ற இடத்திற்கு வந்தார்கள். அங்கு அண்ணா அவர்களை வரவேற்று மாலை யணிவித்துத் தண்டலம் நோக்கி அழைத்துச் சென்றார்.

செல்லுகின்ற வழியில் படுநெல்லி என்ற கிராமத்தில் தோழர்கள் நைனாசாகிப், சுதர்சனம் (நாயுடு) அவர்கள் முதலமைச்சரையும், அண்ணாவையும் வரவேற்று மாலை அணிவித்தார்கள். அங்கிருந்து புறப்பட்டு தண்டலம் செல்லும் வழியில் திரும்பினர்.

புதிதாகச் செப்பனிடப்பட்ட மண் பாதையில் கார்கள் முக்கி முனகிக்கொண்டு புள்ளலூரை நெருங்கும்போதே இசைக் கருவிகளினின்றும் எழுந்த இன்பஒலி காதில் விழுந்தது. அந்த ஊரில் முதலமைச்சருக்கு வரவேற்பு இதழ் படித்தளிக்கப்பட்டது.

பல்லவப் பேரரசன் மகேந்திர பல்லவன் சாளுக்கிய மன்னன் புலிகேசியைத் தாக்கிய இடம் புள்ளலூர் என்று வரலாறு கூறுகின்றது.

அந்த வரவேற்பு நிகழ்ச்சி முடிந்ததும் முதலமைச்சர் அவர்களும் அண்ணாவும் தண்டலம் வந்தடைந்தனர்,

எப்போது வரப்போகின்றார்கள் என்று காத்திருந்தவைபோல் வெடிகள் வெடித்து வருகைக்குக் கட்டியம் கூறின. மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

விழாக்கோலம் போல் தெருவெல்லாம் வீட்டுக்கு வீடு தோரணங்களும் வரவேற்பு வளைவுகளும் கட்டப் பெற்றிருந்தன. அந்த அழகிய தெருவில் கிராமத்து இசைக் கருவிகள் முழக்கம் செய்ய முதலமைச்சரும் அண்ணாவும ஊர்வலமாக மாநாட்டு மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

தொகுதியைச் சேர்ந்த கிராமத்து மக்களின் விழிகளில் ஒரு நம்பிக்கை ஒளி புலனாகியது. பன்னெடுங்காலமாகக் கவனிக்கப்படாமல் இருந்த தம்முடைய குறைகளை எடுத்துச் சொல்லும் பிரதிநிதியும், எடுத்துச் சொல்லப்படுவனவற்றைக் கேட்க வேண்டிய முதலமைச்சரும் ஒன்றாக இருப்பதையே அவர்கள் வரவேற்பது போல் காணப்பட்டனர்.

முதலமைச்சர் அவர்களை வரவேற்கும் முறையில் அண்ணா அவர்கள் முதலில் தம் உரையை ஆற்றினார்கள். அவர் சொன்னார் :

காஞ்சீபுரம் தொகுதியைச் சேர்ந்த நீங்கள் எல்லாம் இந்தச் சிற்றூரில் இவ்வளவு பெருந்திரளாகக் கூடியிருப்பது நம்முடைய மாநிலத்தின் முதலமைச்சர் காமராசர் அவர்கள் இங்கே நம்மிடத்திலே, நம்முடைய நிலைமைகளை நேரடியாகப் பார்ப்பதற்கும், அதற்கான நல்ல அறிவுரைகளை கிரா

மத்து மக்களுக்குத் தருவதற்கும் வந்திருக்கின்ற இந்த விழாவில் நீங்கள் எல்லாம் கலந்துகொள்ள வந்திருக்கின்றீர்கள். இந்தச் சிற்றூருக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வரவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்ட நேரத்தில் மிக்க மகிழ்ச்சியோடு பெரிய பதவியிலே இருப்பவர்கள் வழக்கமாகக் கையாளும் முறையைக் கையாளாமல் தாராளமாக வருகின்றேன் என்று என்னிடத்திலே ஒப்பம் அளித்தார்கள். அவர்களை நான் வரும்படியாகக் கேட்டுவிட்ட பிறகு அதிலேயிருக்கும் பெரிய பொறுப்பு எனக்கு உண்மையிலேயே சிக்கலாக இருந்தது. இந்த வழி கண்டுபிடிக்க முடியாத கிராமத்திற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களை வரவழைத்துத் தொல்லை தருவதாக ஆகுமே என்று நான் கொஞ்சம் ஆயாசப்பட்டேன். ஆனால் நாட்டுக்கே வழிகாட்ட வேண்டும் என்று அவரை இன்றையதினம் நாம் நம்பியிருக்கின்ற போது வழி இல்லாவிட்டாலும் இத்தகைய கிராமங்களுக்கு வருவதிலே அவர்கள் மெத்த மகிழ்ச்சி அடைவார்கள் என்று எனக்கு நானே சமாதானம் தேடிக்கொண்டேன்.

இன்றையதினம் நம்முடைய நாட்டில் கிராமப்புறங்கள் எந்த நிலையில் சீர்குலைந்துள்ளன என்பது நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் சார்ந்திருக்கின்ற இந்தக் காஞ்சிபுரம் தொகுதியில் ஏறக்குறைய 130 கிராமங்கள் இருக்கின்றன. இந்தத் தொகுதியிலே உள்ள கிராமங்களில் வாழுகின்ற மக்கள் மிக்க அடக்க ஒடுக்க உணர்ச்சியோடும் நாட்டினுடைய நன்மையை மனதிலே கருதியும் நீண்டகாலமாகப் பல குறைகளைத் தாங்கிக் கொண்டுவந்துள்ளார்கள். அப்படிப்பட்ட கிராமத்து மக்கள் நாட்டு முதுகெலும்பு என்பதனைத் தெரிந்து கொண்டிருக்கின்ற ஒரு நல்ல தலைவர் இன்றையதினம் நம்முடைய மத்தியிலே இருக்கின்றார்கள். அவரிடத்திலே நம்முடைய கிராமத்துத் தோழர்கள் தங்களுக்கு உற்ற குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லிக்கொள்ள வேண்டும் என்று மெத்த ஆவலோடு இருக்கின்றார்கள்.

நம்முடைய முதலமைச்சர் கிராமத்து முன்னேற்றத்தில் நல்ல அக்கறை காட்டுகின்றவர் என்பதால்தான் நானும் அவரும் வேறு வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்றாலும் இந்தப் பிரச்சினைகள் கட்சிக்கு அப்பாற்பட்டன என்ற ஒரு பெருந்தன்மையிலே அவர்கள் இன்றையதினம் வர இசைந்தார்கள்.

*

கட்சிகள் என்பவை நாட்டு மக்களின் நலனுக்காக ஏற்பட்டவைதான். கட்சி வளர்ச்சியைவிட மக்களின் நலம் வளருவதுதான் மெத்தவும் நல்லது என்பதனை அண்ணா வலியுறுத்தினார்கள்.

ஒரு பெரிய தலைவருக்கு இருக்கிற சிறப்பியல்பு கட்சியைவிட நாட்டு மக்களுடைய தொண்டுதான் முக்கியம் என்பதும், கட்சியே நாட்டு மக்களுக்குத் தொண்டாற்றுவதற்கு இருக்கிற கருவிதான் என்பதும் என்றைய தினம் அவர்கள் உள்ளத்திலே ஆழப் பதிகின்றதோ, அன்றைய தினம்தான் அவர்கள் சாதாரணத் தலைவர்கள் வரிசையிலே இருந்து பெருந் தலைவர்கள் வரிசையிலே புகுகின்றார்கள். நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் அத்தகைய பட்டியலிலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்பது அவர்களை நீண்ட காலமாக எதிர்த்துக்கொண்டு வருகின்ற, இன்னும் எதிர்க்கப்போகின்ற நான் நன்றாக உணர்ந்திருக்கின்றேன். இந்தக் கருத்தைக் காமராசர் அவர்களும் தம்முடைய பதில் உரையில் வரவேற்றுப் பேசினார்கள்.

> அரசியல் வேறுபாடுகள் எல்லாம் உங்களுடைய நலனுக்கு— இந்தநாட்டில் உள்ளவர்கள் நலனுக்கு பாடுபடவேண்டும் என்ற முயற்சியால் ஏற்பட்ட அரசியல் கட்சிகளே தவிர தங்கள் சொந்தத்திற்காக ஏற்பட்ட அரசியல் கட்சிகள் அல்ல,

என்று காமராசர் குறிப்பிட்டார்.

வழி கண்டு பிடிக்க முடியாத சிற்றூரில், மாநாடு நடைபெற்றும் நகரத்து மக்கள் பலரை ஆர்வம் அங்கே ஈர்த்துவந்திருந்தது. அதைப்பற்றிக் குறிப்பிடும்போது அண்ணா கிராமத்து நிலைமையை விளக்கினார்கள்.

“முதலமைச்சர் அவர்களே எங்கள் தொகுதியிலே உள்ள கிராமத்தை நீங்கள் காணுகின்றீர்கள். கிராமத்து மக்களையும் நீங்கள் பார்க்கின்றீர்கள். நான் பெரிதும் கிராமத்து மக்களை மட்டுமே உங்கள் கண்முன்னாலே காட்டவேண்டும் என்று எண்ணினேன். ஆனால் ஆர்வம் காரணமாக நகரத்து வாலிபர்களும் ஏராளமாக இங்கே கூடியிருக்கின்றார்கள், அவர்கள் கிராமம் அல்ல என்பதை தாங்கள் தயவு செய்து தெரிந்துகொள்ள வேண்டும்.

சாதாரணமாக மிகவும் மலர்ந்த முகத்தோடு இந்தக்

(14-ம் பக்கம் பார்க்க)

திருட்டு ஜன மந்திரி!

ஒன்பது ஆண்டுகளுக்கு முன் ஓடிப்போனார், ஒருவர். ‘லைசென்ஸ், இல்லாமல் இரும்புச் சாமான்களை கப்பலில் கொண்டுவந்து இறக்குவது — பிறகு கொஞ்சம் பணம் வாங்கிக்கொண்டு அவைகளைச் சம்பந்தப்பட்டோருக்கு ‘டெலிவரி’ செய்வது—நடுவில் இலஞ்சம் வாங்கிக்கொள்வது—இதே வேலையைச் செய்துகொண்டிருந்தாராம் இவர். இதனால் சர்க்காருக்கு வரவேண்டிய வரிப் பணம் நாற்பது இலட்சம் நாசமாயிற்றாம்.

இந்த வேலையில் ஈடுபட்டிருந்தவர், அதிகாரியல்ல, ஒரு பெரிய மந்திரி!!

வேலியே பயிரை மேய்வதா?—என்பீர்கள். இந்த விபரம் வெளியானதும், மந்திரி, ஓடிப்போய் விட்டாராம். ஒன்பது ஆண்டுகள் தலைமறைவாகவே யிருந்திருக்கிறார். அவரை இந்தக் கிழமை, பிடித்துவிட்டார்கள்.

வேறெங்குமல்ல, பர்மாவில்தான் இந்த நிகழ்ச்சி! 1948-ல் வியாபார மந்திரியாக இருந்த இவர் பெயர் **ஊ - கோ - கோயீயூ !!**

வை, ராஜா, வை!

— பழநி —

இந்தக் கதைக்கு முக்கியமான ஆள் **போக்கர்**—வில்லன் **முத்தப்பா**—சினாபாவுக்குக்கூட, இம்மாபெரும் போரில் பங்குண்டு. இவர்களைத் தவிர இரண்டு போலீஸ்காரர்களும், இரண்டு பக்காத் திருடர்களும் இருக்கிறார்கள். தங்கச் சிலுவை **தோமா**, யானை **ராமன்** ஆகியவர்களே அந்தத் திருடர்கள். இறந்துபோன யானையைத் திருடிப் புகழ் பெற்றவன் ராமன்! மாதாகோவிலிலிருந்து தங்கச் சிலுவையைத்திருடிப்பெயர் பெற்றவன் தோமா! "ஏம்பா! தோமா இப்படிச் செய்யலாமா," என்று அவனைக் கேட்டபோது," இயேசுநாதர், பாபம், மரச்சிலுவையில் வைத்துத்தானே சித்திரவதை செய்யப்பட்டார். அப்படியிருக்கும்போது ஏன் அவருக்கு தங்கச் சிலுவை?" என்று பதில்சொன்னானாம் அவன்.

சுமார் இரண்டாயிரம் குடிமக்களுக்கு இந்தக் கதையில் தொடர்பு உண்டு. ஏனெனில் அவர்கள்தான், வாரா வாரம் பொருள்களை விற்கவும், வாங்கவும் அந்தச் சந்தைக்கு வந்து போவார்கள். ஒவ்வொரு செவ்வாயும், சனியும், அங்கு சந்தை கூடும். சப்தமும், அதிகமாகக் கேட்கும்.

போக்கருக்கு ஒரே ஒரு கண்தான்! இன்னொன்று, அவன் சிறு வயதில், ஏதோ ஒரு சண்டையில் போய்விட்டதாம். 49 - வயது இருக்கும் இப்போது. காவியேறிய பற்களுடன் காட்சி தருவான். அவனுடைய மகள்தான் சினாபா. அவ்வூரிலேயே, நல்ல அழகி. அவளை யாராவது ஒரு நல்லவனுக்குக் கட்டிக் கொடுத்துவிடவேண்டும் என்பது அவன் லட்சியம். அதற்காக தன் வசம் 120 ரூபாய் சேர்த்து வைத்திருந்தான். எப்படியாவது 500 ரூபாய் சேர்த்து நகைநட்டுகளுடன் தன் மகளைக் கலியாணம் செய்துவைக்கவேண்டுமென்பதற்காகப் படாத பாடுபட்டு வந்தான்.

முத்தப்பாவுக்கு 21 - வயது இருக்கும். கருத்த நிறம். எனினும், சிரிக்கும்போது கவர்ச்சி மின்னும். சினாபாவைப் போல அவனுக்கும் தாய் கிடையாது. எப்போதோ, அவன் தந்தை, ஒரு திருட்டு வழக்கில் அகப்பட்டுக்கொண்டு சிறையிலேயே செத்துப் போய்விட்டான். சொந்தக்காரர்களையும் அவனுக்குத தெரியாது. முத்தப்பாவைக் கண்டால் போக்கருக்குப் பிடிக்காது. காரணம் வேறு எதுவுமல்ல! ஒரு ரூபாய் கொடுக்கவேண்டும் என்

வண்டு

கிற ஒப்பந்தத்தின் பேரில் போக்கர், முத்தப்பாவுக்கு எப்படி பீடி பிடித்து மூக்கால் புகைவிடுவது என்பதைச் சொல்லிக் கொடுக்க ஒப்புக்கொண்டான். கலைத் திறனைக் கற்றுக்கொண்ட முத்தப்பா, குரு காணிக்கை முழுவதையும் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டான். வெறும் 5½ அணா மட்டுமே கொடுத்தான்!!

"அயோக்யன்! முட்டாள்! பரதேசிப் பயல். எனக்கு இன்னும் 10½ அணா கொடுக்கவேண்டும். போகிறதைப் பார்! என்னிடம்தான் பீடி, பிடிக்கக் கற்றுக்கொண்டான்;" என்பான் போக்கர்.

இப்படிப் பல பேரிடம் அவன் சொன்னது, முத்தப்பாவின் எதிர்காலத்தைப் பாதித்தது. இல்லையென்றால், முத்தப்பா இன்று ஒரு பக்காத் திருடனாகியிருக்கக் கூடும்! இந்த இலட்சியத்துடனேயே அவன், ராமன் நாயரிடமும், தோமாவிடமும், 'தொழில்' கற்க விரும்பினான். போக்கரை ஏமாற்றியது அவர்களுக்குத் தெரியவே, 'நடத்தை சரியில்லாதவனை' வைத்துக்கொள்ள விரும்பவில்லை. இது விஷயத்தில் முத்தப்பாவுக்கு, போக்கரிடம் மகாகோபம். தன்னைப் பற்றி கேவலமாகப் பேசி தன் வருங்காலக் கீர்த்திக்குப் பங்கம் தேடிவிட்டான் என்கிற ஆத்திரம்.

ராமனும் தோமாவும் புறக்கணித்து விடவே, பெரிய அளவில் இல்லாவிட்டாலும், சிறிய அளவில், தொழிலைத் துவங்கினான். சந்தைக்கு வருவோர் போவோரிடம் 'பிக் பாக்கெட்' அடிப்பதுதான் அத்தொழில்! இதற்கு வருவதற்கு முன்கூட, போக்கரிடம் போய், அவனது தொழிலைக் கற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்தான். ஏற்கனவே ஏமாற்றிய சிடனை, எந்தக் குருதான் ஒப்புக்கொள்வார்? அதோடு, எந்தத் தொழிலுக்கும் மூளையும் கொஞ்சம் பணமும் வேண்டுமே! போக்கரைப் பொறுத்தவரையில், முத்தப்பாவுக்கு மூளையிருக்கிறதென்பதை ஒத்துக்கொள்ளத் தயாரில்லை. அதோடு, அவன் தொழிலுக்குத்

தேவையான சீட்டுக் கட்டு வாங்கும் அளவுக்குக் கூடப் பணம் கிடையாது. ஆகவே, முதல், தேவைப்படாத இத்தொழிலில் இறங்கினான் முத்தப்பா.

ஒரு சீட்டுக் கட்டு—தினசரி ஏடு ஒன்று—நான்கு கற்கள், இவைதான் போக்கருக்கு முதல். தினசரித் தாளை விரித்துப் போடுவான். காற்றடித்தால் பறந்துவிடாமலிருக்க நான்கு மூலைகளிலும் கற்களை வைப்பான். பிறகு, சீட்டுக்கட்டிலிருந்து இரண்டு 'ஏஸ்' ஒரு 'ராஜா'வை எடுப்பான். சந்தைக்கு வருவோர் போவோர்முன் அவன் தொழில் ஆரம்பமாகிவிடும்.

"வை ராஜா வை! ஒண்ணு வச்சா ரெண்டு, ரெண்டு வைச்சா நாலு, வை ராஜா வை! ராஜா மேலே வச்சா உனக்குக் காசு. ஆஸ் மேலே வச்சா எனக்கு. யார் வேணும்னாலும் வாங்கோ. வாங்கோ" என்று விளம்பரம் செய்வான். கொஞ்சம் கூட்டம் சேர்ந்ததும் மூன்று சீட்டையும் போடுவான். ஆசைப்பட்டவர்கள் அணா, ரூபா எல்லாம் வைப்பார்கள்! ஒரு தடவை ஜெயிக்கக்கூட முடியாது, அவர்களால். கண் திறக்குமுன் சீட்டுகள் மாறிக் கிடக்கும். தொடர்ந்து இப்படியே செய்தால் 'வியாபாரம்' படுத்துவிடுமே! அதற்காகக் கூலி கொடுத்து சிலரை வைத்திருப்பான். நான்கு ஆட்டத்துக்கு ஒரு தடவை அவர்கள் வந்து ஆடுவார்கள் — சரியாக ராஜா மீது வைத்து ஒற்றைக்கு ரெட்டையாகப் பணம் வாங்குவார்கள். பிறகு, திருப்பிக் கொடுத்துவிடுவார்களென்பது எப்படித் தெரியும் மக்களுக்கு! அதனால், அவர்களைப்போலத் தாங்களும் வெற்றி பெற வேண்டுமென்று, காசை வைத்துத் தோற்றுவிட்டுத் தலையில் கையை வைத்துக்கொண்டு போவார்கள். இப்படி ஒவ்வொரு வாரமும் செய்தால் போலீசில் அகப்பட்டுக்கொள்ள நேருமே அதற்காக வாராவாரம் இரண்டு ரூபாய்களை எடுத்துவைத்துவிடுவான் போக்கர்! அங்கு காவலுக்கு வரும் இரண்டு போலீஸ்காரர்களும் 'கண்டும் காணாததுமாய்' இருந்துவிடுவார்கள்!!

முத்தப்பாவின் தொழிலுக்கு இவ்வளவு 'தந்திரம்' தேவைப்படவில்லை. பொறுமையும் சமயமறிந்து தொழில் செய்யும் சாமர்த்தியமும்தான் தேவைப்பட்டது. ஒரு பெரிய சால்வையும் துணிச்சலும்தான் அவனுக்கு முதல். வாய்வலிக்கப் போக்கரைப்போல் கூவவேண்டிய அவசியமும் இல்லை. காத்திருக்கவேண்டியது—ஆட்களை 'எடை'போடவேண்டியது—அருகில் போய் உரசவேண்டியது -- போர்த்தியிருக்கும் சால்வையைத் தளர்த்திக்கொள்ள வேண்டியது. கை வெளியே தெரியாமலிருக்க இந்த ஏற்பாடு — 'தொழில்' நடாத்தியதும் நைசாக நழுவிவிடவேண்டியது. இந்தத் தொழிலை ஒழுங்காகச் செய்ய அவனுக்குப் பெரிய எதிரியாயிருந்தது அவன் உயரம்தான்! ஆறடி இரண்டு அங்குலம் இருந்தான். இதனால், இஷ்டப்படி குனிய முடிவதில்லை. அவன் எங்கு இருந்தாலும் சுலபத்தில் அடையாளம் கண்டு பிடித்துவிட முடிந்தது. கூட்டத்தோடு கலந்து நழுவவும் இடையூறாயிருந்தது. உள்ளூர்க்காரர்கள் யாராவது அவனைப் பார்த்துவிட்டால், "ஏ, மூட்டை தூக்கிப் போகிறவனே! உன் பக்கத்தில் முத்தப்பா! பர்ஸ் பத்திரம்!" என்று கூவி எச்சரிக்கவும் செய்தார்கள். அப்படி யாராவது தொழிலுக்கு இடையூறு செய்தால், சண்டைக்குப் போக மாட்டான் அவன். அசட்டுச் சிரிப்போடு, போய்விடுவான். ஆனால், 'வாடிக்கைக்காரர்களான' போலீசார்விடுவார்களா, தொழில் சரியாக நடக்காவிட்டாலும் வாராவாரம் ஒரு ரூபாய், அவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. அதிலும் போக்கர், "திருட்டுப்பயல்! பத்து ரூபாய் சம்பாதித்தான், நய்னா. உங்களிடம் பொய் சொல்கிறான்" என்றுகாட்டிக்கொடுக்கத் தவறுவதில்லை, அதுபோன்ற சமயங்களில், "ஒற்றைக் கண்ணா! உன் இன்னொரு கண்ணையும் ஒரு நாளைக்குத் தோண்டுகிறேன் பார்!" என்று சீறுவான், முத்தப்பா. இது, அந்த ஊரில் எல்லோருக்கும் தெரியும். எதற்கும் லாயக்கில்லாத முட்டாள் என்பர் முத்தப்பாவை! வாராவாரம் நிறையச் சம்பாதிக்கும் போக்கரின்புத்திசாலித்தனத்தில் ஊராருக்கு மிகத்திருப்தி! இப்படிப்பட்ட முட்டாள், மகா புத்திசாலியான போக்கரையே ஏமாற்றி அவன்மகள்சினாபாவைத்திருமணமும் செய்துகொண்டான். அதுதான், கதை.

> கேரளத்துக் கதை இது! மலையாளத்தில் சிறுகதைச் சிற்பியாக விளங்கும் வைக்கம் "முகம்மது பஷீர்" என்பவர் தீட்டி "காரவான்" ஏட்டில் வெளிவந்தது.

* * *

ஒரு சனிக்கிழமை, காலை நேரம், போக்கர் கடையை பிரித்துவிட்டான். அந்தப் பக்கம் வந்த முத்தப்பா, இன்னும், டீகூட குடிக்கவில்லை. ஏனெனில், கையில் காசில்லை. 'போணி' செய்ய ஒரு ஆள்கூட கிடைக்கவில்லை. வயிறோகிள்ளியது. அப்போதுஒரு ஆள் தென்பட்டான்! அவன் நடையையும், உடையையும் கண்டபோது சரியான கிராக்கி அகப்பட்டுவிட்டதென்று ஆனந்தமடைந்தான் — நிச்சயம் அவன் ஒரு இலட்சாதிபதியாயிருக்க வேண்டும் என்று எண்ணினான். அலட்சியமாக, சிகிரெட் பிடித்துக் கொண்டு சென்ற அவனை நெருங்கினான். பர்ஸ், முத்தப்பா கையில்! பிரித்தான்— $5\frac{1}{2}$ அணா சில்லரையும் ஒரு சினிமா நடிகையின் படமும் இருந்தது. வந்த ஆத்திரத்தில் படத்தை சுக்கு நூறாகக் கிழித்தெறிந்துவிட்டு, நான்கு அணாவுக்கு டீயும் தோசையும் சாப்பிட்டான். அரையணாவுக்குப் பீடி வாங்கிக்கொண்டு மீண்டும் தொழில் செய்யக்கிளம்பினான்.

"வை ராஜா வை! அணா வச்சா ரெண்டணா.........ஒரு ரூபா வச்சா இரண்டு ரூபா...வா ராஜா வா!" என்கிற போக்கரின் அழைப்பு கேட்டது. சரி, ஒரு சான்சு பார்ப்போம்என்றுபோக்கரிடம்போனான் மீதமிருந்த ஒரு அணாவை விளையாடினான். போக்கரிடமா முடியும்! போயிற்று ஓரணா! "முட்டாப் பயலே! காசிருந்தா இன்னும் வச்சுப்பாருடா!" என்று கெக்கலித்தான், போக்கர். முத்தப்பா முகத்தில் ஈயாடவில்லை! பீடியைப் பற்றவைத்துக் கொண்டு அருகிலிருந்த ஆற்றங்கரைப் பக்கம் போனான். அவன் மனது ஒரு

லையில்லை "தோமாவிடமும் ராமன் நாயரிடமும்...... இருந்திருந்தால்" என்கிற எண்ணம் வந்தது. "இந்த அயோக்யன்தான் என் சங்கடத்துக்கே காரணம்" என்கிற எரிச்சல் அதிகமாயிற்று.

சந்தைக்கு சரக்குகளை ஏற்றிக்கொண்டு வந்திருந்த படகுகள் கரையோரம் கிடந்தன. தண்ணீருக்கு அருகில் அப்போதுதான் இறக்கப்பட்ட கறிகாய், வாழைப்பழக் குலைகள், தேங்காய், பலாப்பழம் எல்லாம் அப்படியப்படியே கிடந்தன. அவன் கவனத்தை இவை யாவும் கவரவில்லை! அங்கே எதிர்பாராத ஆச்சரியம் ஒன்று நிகழ்ந்தது. அங்கே கிடந்த வாழைப்பழக் குலை ஒன்று திடீரெனக்குதித்து தண்ணீரில் போய் விழுந்தது. இதென்னமாயமா, மந்திரமா, என்று முத்தப்பா திகைத்துப் போனான்! ஒரே ஒரு குலை மட்டும், போய்த் தண்ணீரில் விழுவதென்றால்?

ஆற்றில் விழுந்தபழக்குலை நீரை எதிர்த்துக் கொண்டு போகலாயிற்று ஆச்சரியமடைந்தமுத்தப்பா ...தரை விலக்கிக்கொண்டு, அடியெடுத்து வைத்தான். ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியம். அங்கே. போக்கரின் மகள், சினாபா நின்றுகொண்டு, ஏதோ ஒன்றை இழுத்துக்கொண்டிருந்தாள். அவள் கையில் நீண்ட குறடு ஒன்று இருந்தது. சில வினாடிக்குள் பழம் அவளருகில் வந்தது. மெதுவாகத் தண்ணீரில் மூழ்கிப்போய், குறட்டின் ஒரு பக்கத்தில் கட்டப்பட்டிருந்த பெரிய தூண்டில் முள்ளை வீசி, பழக்குலையைத் தள்ளி, நீர் வழியாகக்கொண்டுவந்திருக்கிறாள் என்பது விளங்கிவிட்டது. போக்கரின் வீடு, சந்தைப் பேட்டையில், ஆற்றின் ஓரமாக இருந்தது.

என்ன இருந்தாலும் ஒரு பெண்! என்று எண்ணினான். ஆண்கள் திருடுவது அவனுக்கு ஒரு பெரிய காரியமாகத் தென்படவில்லை. இதற்குள், சினாபா, இவன் நிற்பதைக் கவனியாதவளாய் பழக்குலையுடன் கரையேறினாள். முத்தப்பாவைக் கண்டதும் பயத்தால் பழத்தைப் போட்டுவிட்டாள்...முகமெல்லாம் நாணத்தால் சிவந்தது......தலையிலிருந்து தண்ணீர்ச் சொட்டச் சொட்ட விழித்தாள்.

"சினாபா!" என்றான் முத்தப்பா. குரலில், கோபம் இல்லை. பரிதாபம் இருந்தது.

"ஏன்!" மிக மெதுவாகப் பதில் சொன்னாள், அவள்.

"இதுஉனக்கு நல்லாயிருக்கா?"

"இல்லே!"—மெதுவாகவே இதையும் சொன்னாள்.

"இன்னொருதரம் இப்படிச் செய்வியா?"

"மாட்டேன்"

"சரி, ஓடு. போய் தலையைத் துவட்டு. சளி பிடிக்கும்"

அவள் ஓடிவிட்டாள். பழம் கீழேகிடந்தது. அதை எடுத்துக்கொண்டு அவள் வீட்டிற்குப் போனான் முத்தப்பா. இதற்கு முன் இருவருக்கும் பழக்கமுண்டா—எப்படி முத்தப்பா அவளிடம் தொடர்பு கொண்டான் என்கிற கேள்விகளுக்கே இனி இடமில்லை. சினாபாவைக் கேட்டால் "அவர் ஒன்றும் முட்டாளல்ல!" என்றுதான் சொல்லுவாள்.

இருவருக்கும் 'தொடர்பு' ஏற்பட்டிருக்கிற சேதி போக்கருக்குத் தெரியாது. சினாபாவைச் சந்தேகிக்க இடமில்லை. எப்படியாவது ரூ. 500 சேர்த்து அவளை சிறப்பாகக் கலியாணம் செய்து கொடுத்துவிடவேண்டும் என்கிற நோக்கத்திலேயே இருந்தான். அவன் ஒரே ஆசை அது. இரவும் பகலும் அதைப்பற்றியே எண்ணிக்கொண்டிருந்தான். ஒரு நாள், இந்த எண்ணங்களோடு, வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தான் உப்பு, மிளகாய், வெற்றிலை, கருவாடு முதலியவைகளோடு. அங்கே! முத்தப்பா, சினாபாவின் மடியில் தலைவைத்துப் படுத்துக்கொண்டிருந்தான். ஒரு தந்தையின் மனதை உடைக்தெறிய வேறென்ன வேண்டும்? ஊருக்கே பெரிய முட்டாள்......ஒரு பிக்பாக்கெட்...கருத்த பயல்...போக்கரின் அழகான மகளின் மடியிலா!!

"அப்பா" என்று கதறிவிட்டாள், சினாபா.

முத்தப்பா, பரபரப்படையவில்லை. இலேசாகச் சிரித்தான். வழக்கமான அசட்டுச் சிரிப்புக்குப் பதில் கம்பீரமாகச் சிரிக்க முயற்சித்தான்!! போக்கரின் கண்கள் சிவந்தன —கையிலிருந்ததை அவனை நோக்கி வீசினான். முத்தப்பாவுக்கும் கோபம் வந்தது. என்றாலும் சமாளித்துக்கொண்டு,

"மாமா! நான் சினாபாவை கலியாணம் செய்துகொள்ளப்போகிறேன்" என்றான்.

இந்த வார்த்தைகளிலேயே யாவற்றையும் விளக்கிவிட்டான் முத்தப்பா. மாமா, என்கிற அழைப்பால் தன்னுடைய உறவை விளக்கிக்கொண்டான். கலியாணம் செய்துகொள்ளப் போகிறேன்! — என்று சொன்னதன் மூலம் உன்னுடைய சம்மதத்துக்காக நான் காத்திருக்கவில்லை என்றும் தெரிவித்துவிட்டான். எப்படியிருக்கும் தந்தைக்கு?

"போடா வெளியே!"

"மாமா! ஏதாவது இதுவரையில் தப்புத் தண்டா செஞ்சிருந்தாலும் மன்னிச்சுடணும். இனிமே பிக்பாக்கெட் அடிக்கலே..."

"ஏன்! பிச்சை எடுக்கப் போறீயோ?"

"இல்லே! ஒரு டீக்கடை வைக்கலாம் என்று இருக்கேன் மாமா! அதுக்காக ஒரு பத்து ரூபாக் கொடுங்க......"

"பத்து ரூபாயா வேணும்! என்ன தைரியண்டா உனக்கு? முதல்லே எனக்கு கொடுக்க வேண்டிய $10\frac{1}{2}$ அணாவையும் கொடுத்துட்டு, வெளியே போடா நாயே!"

முத்தப்பா, இப்போதும் கோபங்கொள்ளவில்லை. வெற்றி கொண்ட வீரனைப்போல நின்றான்.

"அப்ப மாமா, கலியாணத்தை இந்த மாசத்திலேயே முடிச்சிடலாம்னு விரும்பறோம்"—

இதற்குமேல் தாங்கமுடியவில்லை போக்கரால்! கர்ச்சித்தான் "போறீயா? இல்லே!"

"போறேன் மாமா! வந்து கலியாணம் செஞ்சுகிறேன்" என்று அமைதியுடன் வெளியேறி விட்டான், முத்தப்பா.

* * *

இந்த 'மகாயுத்தம்' பற்றிய செய்தி, காட்டுத் தீப்போல் பரவியது. ஊரெல்லாம் பேசிக்கொண்டார்கள். யார்பக்கம் நியாயம் இருக்கிறது என்பதில், ஊரே இரண்டாகப் பிரிந்தது, "அவனுடைய விருப்பம் எப்படியோ அப்

படியே நடக்கவேண்டியது" என்று 'நியாயவாதி'களான ராமனும் தோமாவும் அறிவித்தனர்—"பெண்ணும் பிள்ளையும் மனம் ஒத்த பிறகு, இதில் பேச்சு என்ன இருக்கு?" என்றும் தெரிவித்து விட்டனர். ஆனால், போக்கர்? இணங்கும் வழியில்லை. கையிலிருக்கிற 120-ரூபாயைக்கொண்டு யாருக்காவது திருமணம் செய்து கொடுத்துவிடுவது என்று முடிவு செய்துவிட்டான். இந்தச் செய்தியை அறிந்ததும் முத்தப்பா 'யுத்தப் பிரகடனம்' செய்வதைத் தவிர வேறு வழியில்லையெனக் கண்டான். எனவே ஒரு பெரும் 'போரைச்' சந்திக்க அந்த ஊர் மக்கள் தயாராயிருந்தார்கள்.

விரைவில் ஆரம்பமாகும்

தோழர் இராதாமணாளன் தீட்டிய

"பாண்டியன் திருமேனி"

உள்ளம் தொடும் தொடர் கதை!

ஒரு செவ்வாய்க்கிழமை. சந்தைக்குக் கூட்டம் திரண்டு கொண்டிருந்தது. முத்தப்பா, தன்னுடைய வழக்கமான சால்வையுடன் அலைந்துகொண்டிருந்தான். அவனுடைய கையில் ஒரு ரூபாய் பணம் இருந்தது. அதைப் பல்லில் வைத்துக் கடித்துக்கொண்டிருந்தான் அடிக்கடி. அவனுக்கு அவ்வளவு பிரியம் இருக்கக் காரணம் அது, சிறுபா, கொடுத்த ரூபாய் என்பதால் தான்.

போக்கர், தன்னுடைய 'வியாபாரத்தை' ஆரம்பித்திருந்தான். வை ராஜா வை! — என்கிற அவன் குரல் ஒலிக்க ஆரம்பித்தது. அவனை நோக்கி, முத்தப்பா, புறப்பட்டான். அவனுடைய முகத்தில் திடமான முடிவு தென்பட்டது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு, நேரே, போக்கருக்கு எதிரில் போய் நின்றான். முறைத்துப் பார்த்தான் போக்கர். முத்தப்பா ஒன்றும் பேசவில்லை. ஒரு ரூபாயை எடுத்தான். குலுக்கி வைக்கப்படும் சீட்டுகளை கவனமாகப் பார்த்தான். பிறகு ஒரு ரூபாயை எடுத்து ஒரு சீட்டின் மேல் வைத்தான்! போக்கருக்கு திகைப்பு படர்ந்தது. அவனுடைய 22 ஆண்டு அனுபவத்தில் இதுபோல யாரும் வெற்றி பெற்றதில்லை. எனவே, ஆச்சரியத்தோடு 2 ரூபாயை எடுத்துக் கொடுத்தான். வேடிக்கைப் பார்த்தவர்களுக்கு, ஒரு ஆள் வெற்றி பெற்றுவிட்டதில் ஆனந்தம். அதே சமயத்தில் வேறு யாராவது வெற்றி பெற்றிருந்தால்கூட போக்கருக்கு அப்படியிருந்திருக்காது. தன் எதிரி—தன் மகளைக் கெடுத்தவன் — தன்னைத் தோற்கடிப்பதா? அந்த எரிச்சலில் "வேண்டுமானால் அதையும் வச்சுப் பார்!" என்றான் போக்கர். முத்தப்பாவும் பயப்படவில்லை. வைத்தான். இம்முறையும் வெற்றி பெற்றான். இரண்டு, நான்காயிற்று. தொடர்ந்து ஆட்டம் நடக்க நடக்க, வெற்றி முத்தப்பா பக்கமே இருந்தது. கிழவனுக்கு அழுகை வந்துவிடும் போலாயிற்று. ஏனெனில் ஒரு ரூபாய் இரண்டு ரூபாயல்ல 16-ரூபாய்களை முத்தப்பாவுக்குக் கொடுக்க நேர்ந்தது. வாங்கி பணத்தைப் பையில் போட்டுக் கொண்டு சும்மாப் போய்விடவில்லை முத்தப்பா. கலகல வென்று ஆட்டிக் காண்பித்தான். போக்கருக்கு அவனைக் கடித்துத் தின்றுவிடலாமா என்றிருந்தது. வெற்றி வீரனைப்போல், கூடியிருந்தவர்களைப் பார்த்து, "நான் இன்று முதல் 'பிக் பாக்கெட்' தொழிலை விட்டுவிட்டேன். விரைவில் ஒரு டீக் கடை ஆரம்பிக்கப் போகிறேன்," என்று அறிவித்தான்.

அன்று இரவு சிறுபாவிடம் போக்கர் சொன்னான், "கேட்டியாம்மா கதையை! அந்த அயோக்கியப் பயல், 10½ அணு கடன் கொடுக்கவேண்டிய கழுதை 15 ரூபா ஜெயிச்சிட்டாம்மா!!" சிறுபா, ஒன்றும் சொல்லவில்லை. "வரட்டும் இன்னொரு தரம்! என்னிடமிருக்கும் பணம் எல்லாம் போனாலும் சரி. அந்தப் பயலைத் தோற்கடிக்காமல் விடப் போவதில்லை," என்று கருவிக் கொண்டே, படுத்தான்.

* * *

சந்தை கூடும் நாள், வழக்கம் போல் வந்தது. போக்கரிடம், முன்னைவிட அதிகக் கூட்டம் இருந்தது. முத்தப்பாவும், டீ ஓட்டல் ஆரம்பித்திருந்தான். பேருக்குத்தான் டீ ஓட்டலே ஒழிய, கடலை, காப்பி முதலியவைகள் 'சப்ளை' செய்யப்பட்டன. இரண்டு கண்ணாடி டம்ளர்களில் கரண்டியைத் தட்டி "வாங்க! வாங்க! அருமையான காப்பி...அவசியம் ஒருதரம் வாங்க," என்று கூவலானான். அன்று மாலை கடையை மூடும்போது 20 ரூபாய் இருந்தது. நேராக போக்கரிடம் போனான். ஆட்டம் ஆரம்பமாயிற்று. முத்தப்பா தோற்கவில்லை! 20 ரூபாய் போயிற்று போக்கருக்கு!! ஒவ்வொரு வாரமும், 'ஆட்ட மகா யுத்தம்' தொடர்ந்து நடந்தது. கையிலிருந்த பணமும் போய், கடன் வாங்கியும் வியாபாரத்தை நடத்தவேண்டிய நிலைக்கு ஆளானான் போக்கர். அப்போதும், 'எதிரியே' ஜெயித்ததால், வேறு வழியில்லாமல் சமாதான ஒப்பந்தம் தயாரித்தான் கிழவன். சுருதி குறைந்தது குரலில். "அப்பா தம்பி! இனிமேல் என்னிடம் விளையாட வராதே. ஒவ்வொரு சந்தை கூடும்போதும் உனக்கு 5 ரூபாய்க் கொடுத்து விடுகிறேன். என்னிடம் விளையாட மட்டும் வராதே," என்றான்.

"உன் பணம் யாருக்கு வேண்டும்? எனக்கு, டீ கடையிருக்



கிறது. நீ உன் மகளை எனக்குக் கட்டிக் கொடுத்தால், உன்னிடம் வராமல் நிறுத்தி விடுகிறேன்,'' என்று நிபந்தனை விதிக்கலானான், முத்தப்பா.

கிழவன் என்ன செய்வான். தோமாவும் ராமனும்கூட சமரசம் பேசினர். கடைசியில் வேறு வழியின்றி திருமணம் செய்வித்தான். இருவருக்கும். போலீஸ்காரர் இரண்டு பேரும் வந்திருந்து போக்கரை கௌரவித்தனர். உள்ளூர போக்கருக்குத் தன் மருமகன் இப்போது முட்டாளில்லை என்பதில் ஒரு மகிழ்ச்சியிருந்தது. என்றாலும் ஒரே ஒரு குறை மட்டும் இருந்தது. எப்படி யாராலும் வெல்ல முடியாத தன்னை வென்றான் என்பதுதான். டீ வியாபாரம பலமாக வளர்ந்து, இப்போது இட்லி தோசை விற்குமளவுக்குப் பெரிதாயிற்று. அதனால், மாமனை பழைய தொழிலுக்குப் போகவிட வில்லை, மருமகன். ஒருநாள், இரண்டு பேரும் உட்கார்ந்து கொண்டிருந்தனர். மெதுவாக தன் மனதில் உறுத்திக்கொண்டிருந்த சந்தேகத்தைக் கேட்டான், போக்கர்.

'இது தெரியலியா மாமா! எல்லாம் சிறுபாவின் கிருபைதான். குறிப்பிட்ட ராஜா சீட்டின் மூலையில் ஊசிமுனைபோல நான்கு துவாரங்களிருக்கும் என்று சொன்னாள், அதன்படியே ஆடி, உங்களைத் தோற்கடித்தேன்''

போக்கருக்கு என்னமோபோலிருந்தது. என்ன இருந்தாலும் பெற்றெடுத்து வளர்த்த மகள், தன்னையே தோற்கடிக்கக் காரணமாயிருந்தாள் என்பதை எண்ண சங்கடமாகயிருந்தது. அதே சமயத்தில் தனைனத் தோற்கடிக்கக் காரணமாயிருந்தவள் தன் மகள் என்பதில் ஒரு திருப்தியும் இருந்தது.

•

''மாப்பிள்ளை! பார்த்திங்களா... எவ்வளவுதான் தந்தை தாய் என்றாலும் இந்தப் பெண்கள்...''

வார்த்தையை முடிக்கவில்லை அவன்.

★

''பெரியய்யா! கர்மார்கர் தெரியுமா உங்களுக்கு கர்மார்கர். டில்லியிலே சுகாதார மந்திரியாயிருக்காரே''

''இந்தப் பேரெல்லாம் எனக்கு என்னப்புரியுது!...சரி, அவருக்கு என்ன மணிமுடி?''

''அவருக்கு ஒண்ணுமில்லே! பார்லிமெண்டிலே பேசும்போது, என் முதல் வேலே என்ன தெரியுமா? எல்லோரும் சத்துள்ள உணவு சாப்பிடும்படி செய்வது தான்......எல்லோரும் நன்றாகச் சாப்பிட்டு தேக நலத்துடன் வாழும்படிச் செய்வதுதான், என்று சொல்லியிருக்கிறார்''

''சொன்னாப் போதுமா? எங்கே நடக்குது! இங்கேதான் ஒரு வேளைச் சோத்துக்கே அல்லாடுறோமே...ஆமாம், மந்திரி, சொன்னாருங்கிறியே......அதை எப்படிச் சாதிக்கப் போறாராம்...''

''அதுதான் தெரியலே! விளக்கமாகவும் அவர் தெரிவிக்கலே!!''

''பார்த்தியா...எனக்குத் தெரியும்......ஏதோ ஜம்பத்துக்கு இப்படிப் பேசிடுறாங்க...உருப்படியா ஏதாவது செஞ்சாவில்லே தேவலாம்......''

•

''ஒரு மருந்து கண்டுபிடித்திருக்காங்க, பெரியய்யா! வயோதிகரும் வாலிபரைப்போல இருக்கலாமாம் ......நாடித் தளர்ச்சி இல்லாமெ நரம்பு முறுக்கோடு இருக்கலாமாம்...''

''என்னது? நிசமாவா!!''

''ஆமாம் 5000 கிழவர்களுக்கு இந்த மருந்தை ஊசிமூலம் போட்டுச் சோதனை கூட செஞ்சாங்களாம்......33-நாடுகளைச் சேர்ந்த 800-டாக்டர்கள் கூடிய கூட்டத்தில் இதைத் தெரிவித்திருக்கிறார்கள்......''

''ஆச்சரியமாயிருக்கே! புராணத்திலேதான் சொல்வாங்க...தேவாமிர்தம் சாப்பிட்டா என்னைக்கும் இளமையாயிருக்கலாம்னு......அந்தத்தேவாமிர்தம் ஒருவேளை எங்கேயாவது கிடைச்சிட்டுதோ''

''தேவாமிர்தம், நம்ப புராணத்திலே! ஆனா, இந்த மருந்தைக் கண்டுபிடிச்சவங்க புராணம் படிக்கிறவங்கல்லே ருமேனியாவிலேயிருக்கவங்க......''

''அப்படியா? மருந்துக்கு என்ன பேராம்......''

''நோவோகெய்ன்......''

•

''அரிச்சந்திரன் கதையிலே கடனுக்காக மனைவி சந்திரமதியை விற்றான்...இல்லியா பெரியய்யா''

''இல்லியாவது! அந்தக் கட்டம் வரும்போது......அடடா! எத்தனை தடவை அழுதிருக்கேன் தெரியுமா.........எப்படி மறக்க முடியும்?''

''அதுபோல, ஒருத்தன், இந்தக் காலத்திலும் தன் மனைவியை விற்றிருக்கிறான்...''

''என்னது? என்ன மணிமுடி! நிசமாவா!!''

''நான் ஏன் பொய்ச்சொல்லப் போறேன்...பெரியய்யா!......அஸ்ஸாமிலே ஒரு கிராமத்திலே ஒருத்தன் 200-ரூபாய்க்குத் தன் மனைவியை விற்றானாம்......''

''மனைவியும் சம்மதிச்சாளாமா?''

''சம்மதிக்காமல் முடியுமா... சொல்லியிருப்பான், அரிச்

திரன் சந்திரமதியை விற்கவில்லையா பெண்ணே! அதுபோல நானும் உன்னை விற்கிறேன்...... என்று. இப்படி அவன் விற்ற சேதி, ஊராருக்குத் தெரிந்து, பஞ்சாயத்து கூடி விசாரித்தார்களாம்...''

"விசாரித்து......?''

"உண்மையென்று தெரிந்ததும் இரண்டுபேருக்கும் 30-ரூ அபராதம்போட்டு மனைவியை அழைத்துக்கொண்டு போகும்படி கணவனுக்கு உத்திரவு போட்டார்களாம்......''

*

"பெரியய்யா! ஒரு சேதி தெரியுமோ? நம்ப காமராஜர், வாகினி ஸ்டுடியோவுக்குப் போயிருந்தாராம்!''

"எதுக்கு? மணிமுடி? தெரிஞ்சா பெரியாருக்கு ரொம்பக் கோபமாயிருக்குமே!''

"சினிமா நடிகர் நாகேசுவரராவ் இருக்கிறாரே, அவர் ரூ. 25,000 நன்கொடை கொடுத்தாராம் ஆந்திரப் பல்கலைக் கழகத்துக்கு...... தான் இதுவரை 60-படங்களில் நடித்ததை முன்னிட்டு விழா ஒன்று நடத்தி நன்றி தெரிவித்துக்கொண்டாராம்...ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டிகூட வந்திருந்தாராம். அங்கே போன காமராஜர் என்ன சொன்னாராம் தெரியுமா பெரியய்யா?''

"என்ன சொன்னாராம்?''

"எனக்கு நாகேசுவரராவைத் தெரியாது...அவர் நடித்த படம் ஒண்ணுகூடப் பார்த்ததில்லே...''

"என்ன! ஆளையேத் தெரியாமலா, விழாவுக்குப் போனாரு...''

"ஆமாம் பெரியய்யா, ஆமாம்!''

*

"பெரியய்யா! தங்கம், இந்த நாட்டிலே எவ்வளவு இருக்கிறதாம், தெரியுமா?''

"இதென்ன மணிமுடி! தங்கத்தைப் பற்றி எனக்கு என்னத் தெரியும்......வயல்லே யிருக்கிற சேற்றைப் பற்றிக் கேட்டாலும் எனக்குப் புரியும். தங்கத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?''

"நீங்க இப்படிச் சொல்றீங்க... ஆனா...கேசவ அய்யங்கார் என்பவர் சொல்கிறார்—பதினாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் இருக்கிறதாம்...''

"எங்கே? சர்க்காரிடமா!''

"சர்க்கார்தான் பிச்சை யெடுக்குதே...நகை நட்டாகவும் சாமான்களாகவும் இவ்வளவு கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கமும் வெள்ளியும் பொதுமக்களிடம் இருக்கின்றதாம்...''

"பொதுமக்களிடமா? என்ன தம்பி வேடிக்கையாயிருக்கு!!''

"ஆமாங்க பெரியய்யா! பொதுமக்கள்னா, கலப்பை பிடிக்கும் காத்தான், தறியோட்டும் தையலை ...இவர்களைச் சொல்லலே...ஏது இவர்களிடம் தங்கம்...பேருதான் தங்கம்னு இருக்கும்... பணக்காரங்க எத்தனை பேரு இல்லே...''

"ஆமாமாம்! அவர்களிடம் இத்தனை கோடி ரூபாய்க்கா இருக்கும்...?''

"சொல்றவரு, கோயில் குருக்கள் இல்லே, பெரியய்யா! பேராசிரியர்......பொருளாதாரக் கழக டைரக்டர்...அவர் சொல்றாரு... பதினாயிரம் கோடிக்குத் தங்கம் இருக்கும்னு...''

"இவ்வளவு தங்கமும் பணம் பெருத்தவர்களிடம்தானே கிடக்கும்...ஏ அப்பா! பதினாயிரம் கோடி...!!''

*

"சுண்டைக்காய் இருக்குதே பெரியய்யா, சுண்டைக்காய்! எவ்வளவு அலட்சியமா நினைக்கிறோம், அதை.''

"ஆமாம்! சுண்டைக்காய் விஷயம்னுகூடச் சொல்வதுண்டு...'',

"அந்தச் சுண்டைக்காயில் ஏராளமான இரும்புச் சத்து இருக்கிறது. எல்லோரும் சாப்பிடவேண்டும்... என்று மந்திரி மாணிக்கவேலர் சொல்லியிருக்காரு!''

"அப்படியா?''

"உலக சுகாதார தின விழாவிலே பேசும்போது, சுண்டைக்காய்—கேழ்வரகு — நெல்லிக்காய் எல்லாம் சத்துள்ள பொருள்கள். இதைச் சாப்பிடவேண்டும் என்று சொல்லியிருக்கார்...''

*

"பெரியய்யா! இந்திய உபகண்டத்திலே, எங்கெங்கே என்னென்ன காய்கறிகள் கிடைக்கின்றன—மீன் வகைகள், மாமிசப் பொருள்கள் என்னென்ன அகப்படுகின்றன...என்று புள்ளி விபரம் சேகரித்து இருக்கிறார் பெரியய்யா, ஒருத்தர்!''

"புத்தகம் எழுதியிருக்காரா?''

"இல்லே! இந்தியா நிலப்படம் போட்டு, அதிலே குறித்திருக்கார்...இதுக்கு நாலுஆண்டு ஆயிற்றும்......இதே வேலையாயிருந்து ஆராய்ச்சி செய்து விபரம் சேகரிச்சிருக்காரு...''

"இந்திய சர்க்காரைச் சேர்ந்த ஆளோ?''

"இல்லே! ஒரு பிரெஞ்சுக்காரர் ...இந்தியாவிலேயிருக்கிற ஒவ்வொரு பாகத்திலேயும் ஒவ்வொரு தினுசான உணவு வகைகள் இருக்கிறதையும் சாப்பிடுவதையும் பார்த்து ஒரு யோசனை வந்ததாம்...அதனாலே இப்படியொரு நிலப்படம் தயார் செய்திருக்காரு...''

"வெளிநாட்டாருக்கு ஏற்படுகிற சிரத்தைகூட இங்கே யிருக்கிறவங்களுக்கு இல்லியே!''

"ஆமாம்! இதுவரையிலே, இந்த விபரம் பற்றிய தகவல்கள் இந்திய சர்க்காருக்கேச் சரியாத் தெரியாதாம்...அதனாலே லிலோன் பெடிட் என்கிற இந்தப் பிரெஞ்சுக்காரருடைய முயற்சி மிகவும் பயன்படும் என்று கருதுகிறார்கள்''

"இந்த விபரமே சரியாகத் தெரியாதபோது, எப்படிச் சொன்னார் கர்மார்கர். எல்லோருக்கும் சத்துள்ள உணவு கிடைக்கும் படிச் செய்வதே என் வேலையென்று?''

"சொன்னார்! அவ்வளவுதான்!! சொல்லுகிற எந்தக் காரியத்தைத் தான் இந்தக் காங்கிரஸ் மந்திரிகள் நிறைவேற்றி யிருக்காங்க?''

"ஆமாமாம்! நீ சொல்றது, உண்மைதான்...'' ★

கிளர்ச்சி மோதும்

கீழ் எல்லை

அசாம்
நாக நாடு
பற்றிய விபரங்கள்

கடந்த கிழமை, நாடே அதிரும் வகையில், வேலை நிறுத்தம் செய்து காட்டினர்.

கடைகள் திறக்கப்படவில்லை—வண்டி வாகனங்கள் ஓடவில்லை — இரயில்கள் நின்ற இடத்திலேயே நின்றன.

தொழிலாளர்கள், மாணவர்கள், வியாபாரிகள் அனைவரும் ஒருமனதாக இந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர்.

ஓரவஞ்சனை ஒழிக! டில்லியைக் கண்டிக்கிறோம்!! — எனும் முழக்கம் எங்கும் அதிர்ந்தது.

"டில்லியைக் கண்டித்தார்களா? சரி, சரி. தி. மு. க. - தானே!!", என்பார்கள் தேசிய நண்பர்கள்.

கண்டனக்குரல் கிளம்பியது இங்கல்ல! **அசாமில்!** அங்குதான், டில்லியின் போக்கைக் கண்டித்து இவ்வளவு பெரிய வேலை நிறுத்தமும், மாபெரும் கூட்டமும் நடத்தப்பட்டிருக்கிறது!!

டில்லியை அவர்கள், கண்டிக்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளாக்கியது, ஒரே ஒரு **எண்ணெய் ஆலை.**

அசாமுக்குக் கொடுக்காமல், வேறு மாகாணமாம் வங்கத்துக்குக் கொடுத்ததில், அவர்களுக்கு ஆத்திரம்.

மக்கள் எதிர்ப்பால், அசாமை ஆளும் காங்கிரஸ் அரசே, அல்லாடும் நிலையிலுள்ளது.

அத்தகைய அசாமைப் பற்றிய, ருசிகர செய்திகளைக் கீழே தந்துள்ளோம்.

அசாமை ஒட்டியுள்ளதும், **நாக நாடு** கோருவோருமான, நாகர்களைப் பற்றியும் விபரங்கள் உள்ளன.

* * *

அடர்ந்த காடுகளும், உயர்ந்த குன்றுகளும் பெற்று விளங்கும் அசாம் மாநிலத்தை இயற்கையின் தொட்டில் எனலாம். துப்பறியும் நாவலைப் போலத் தன் வசம் ஏராளமான செல்வங்களை அடக்கிக் கொண்டிருக்கிறது அசாம் துருவிச் செல்லவும், தோண்டி யெடுக்கவும், துரைத்தனத்தார் ஆவன செய்யாததால், பல பொருள்கள் புதையுண்டே கிடக்கின்றன! வானளாவும் மரங்களும், அவைகளினூடே புதையுண்டு கிடக்கும் இயற்கை வளங்களும், எண்ணிறந்தன!!—அவைகளை யெல்லாம் வெளிக் கொணர்ந்தால், பிடித்தாட்டும் வறுமை தொலையும், வாழ்வு துலங்கும் என்று கருதுகின்றனர், அசாம் மாநில மக்கள். அதற்கான முயற்சிகள், டில்லியால், எடுக்கப்படாததே இன்றைய எழுச்சிக்குக் காரணமாகும்.

பக்கத்திலே பர்மா, அருகிலே பாகிஸ்தான், இன்னொரு ஓரத்திலே சீனு இவ்விதம், வெளிநாடுகள் தொட்டுக்கொண்டிருக்கும், எல்லை நாடு இது. இங்கு வாழ்வோர் தொகை ஒரு கோடி எனலாம். காடுகளும், ஆறுகளும் நிறைந்து கிடப்பதால், அசாம் இந்திய துணைக் கண்டத்தின் தொடர்பினை அதிகம் பெறுவதற்கில்லாமலே யிருந்து வந்தது. பிரிட்டிஷாரின் காலத்திலிருந்த இக்கேடு சுதந்திரம் மலர்ந்த பின்னரும் நீங்கவில்லை—துண்டித்து விடப்பட்ட தோணிபோல, கான கத்திலே விரட்டியடிக்கப்பட்ட மான்போல, இருக்கிறது!!

அசாம் என்றால் **எண்ணெயூர்** என்று கூறத் தோன்றும். மண்ணெண்ணெய் வழங்கும், அதன் பழைய பெயர், விளக்கூர் என்பதாம்! வான ஆராய்ச்சியிலும், கோள்நிலை அறிந்து கூறுதலிலும் எவ்வண்ணம் கிரேக்கமும் எகிப்தும் பெருமை பெற்று விளங்கின என்று சரிதத்தில் படிக்கின்றோமோ, அதேபோல இந்த இரு துறையிலும் அசாம் சிறந்து விளங்கிற்றும். அதுபோது, அசாம் மாநிலத்தின் பெயர், **பிரக்ஜோதிஷ்புரி** அதாவது **விளக்கூர்**—என்று விளங்கிற்று.

புராணத்தில் **சொல்லப்படும்** நரகாசூரன், இந்தத் தீபத் **திரு** நகரில்தான் ஆட்சி **செய்தானும்!** அவனை, அவதாரம் **எடுத்துக்** கொன்றூரல்லவா **திருமால்?** அதற்குப் பழி வாங்குவதற்காக நரகாசூரனின் மகன், **பாண்டவர்** களுக்கும், **கௌரவர்களுக்கும்** நடைபெற்ற **குருக்ஷேத்ரப் போரில்** கௌரவர் பக்கம் நின்று **போரிட்** டானும்!! பிற்காலத்தில், **இந்த** பிரக்ஜோதிஷ்புரியைத்தான், **காம** ரூபம் என்று அழைத்தார்கள்.

அசுரன் கதையும், **அவர்களை** ஒழிக்கக் கடவுளர் **அவதாரம்** செய்த வரலாறும் இங்கு வழங்குவதால், **ஆரிய திராவிடப் போர்,** அன்றொரு நாள் இங்கும் **இருந்ததோ** என்கிற ஐயம் எழக்கூடும். **அது** உண்மைதான்! ஒரு **காலத்தில்,** இந்தப் பூபாகம் **திராவிடர்தம் திருக்** கோட்டமாக **இருந்ததென்றும்,** பின்னர், **ஆரியர்—மங்கோலியர்,** அலைபோல் நுழைந்ததால் **யாவும்** கலந்துவிட்டதென்றும் **வர** லாற்று அறிஞர்கள் **கூறுகின்ற** னர். இன்றைய **அசாமில்,** உயர்ந்த **நிலையிலிருப்போர்** யாரென்பதையும், **மலைகளிலும்** காடுகளிலும் மறைந்து **திரிவோர்** யாரென்பதையும் **எண்ணுவோ** ருக்கு, உண்மை **தெள்ளென** விளங்கும்.

திராவிடத்தைப் போல, **அசா** மின் பழைய வரலாறும், **சரியாகத் திட்டப்படவில்லை.** எனினும், **கி. பி. 640-ல்** சீன **யாத்திரீகன் ஹுவான் சுவாங்** வந்து போன பிறகு, **பல** குறிப்புகள் **தரப்பட்டுள்ளன. அப்** போது, அசாம் **மாநிலத்தை** ஆண்டவன் **பாஸ்கர வர்மா என்பவ** னும் பிறகு, **காமரூபம் மூன்றுகி,** ஒவ்வொன்றும் வெவ்வேறு **அரச** ரின்கீழ் **வந்தது. மொகலாயர்** தம் படையெடுப்பும் **நடக்கவே,** அவர்தம் வசமும் **ஒரு பகுதி** சென்றது! இன்று **வங்கத்தின்** பால் சேர்ந்துள்ள பல **பகுதிகள்,** அந்த நாள் **காமரூபத்துக்கு** அடங்கிக் **கிடந்தவையேயாகும்.** கி. பி. 1228-ல் மேற்குப் **பர்மா** வைச் சேர்ந்த **அஹோமியர் என்பார்,** இந்த எல்லை **நாட்டை வென்,** னர், ஒரு பகுதியில், **கோச் வம்சம்** என்று கூறப்படும் **மூதாதையர்**

இருந்தனர். அசோமியர் - கோச் - மொகலாயர், இவ்விதம் மூவரசுக்கு ஆளாகி மூன்று பிரிவுகளாகிற்று அசாம். கோச் வமிசத்தில் கோலோச்சியவர்களில் குறிப்பிடப்பட வேண்டியவன், நாராயணன் எனும் மன்னனாகும். கலையும் இலக்கியமும் இவன் பகுதியில், எழில் பெற்றனவாம்!!

பல்வேறு அரசியல் மாற்றங்களுக்கு ஆளானபோதிலும், பிரிட்டிஷாரின் பிடியில், எளிதில் சிக்கவில்லை அசாம். இந்திய துணைக்கண்டத்திலேயே, கடைசியாக, கீழ்பணிந்த நாடு இதுதான். எப்படி கேரளத்துக்கு ஒரு வேலுத் தம்பியையும், தமிழகத்துக்கு ஒரு கட்டபொம்மனையும், எடுத்துக் காட்டுகிறோமோ அது போல, அங்கும் ஒரு வீரன் இருந்தான். வெள்ளையரை எதிர்த்து வீரச் சமர்செய்து, தூக்குத் தண்டனை வழங்கப்பட்டபோதும் புன்சிரிப்போடு சென்ற, அந்தச் சுதந்திர வீரன் பியோலி--பார்--புகோன் என்பதாகும்! இன்னொரு வீரன் **மணிராம் திவான்** இந்த மணிராம் திவான், 1857-சிப்பாய்க் கிளர்ச்சியின்போது, செய்த செயல்கள பிரசித்தமானவை. இவ்விதம், பழைய பெருமையும, சுதந்திரதாகமும் கொண்ட நாடு, அசாம!! வளமும் அருகே வறுமையும் கொண்டதாக இன்று வாடுவதால்தான், சுதந்திரம் பெற்றும இந்தச் சோகம் ஏன், சோபிதமாய் பம்பாயும் கல்கத்தாவும் இருக்கும் போது அசாம் மட்டும ஏன் அநாதையாய்த் தவிக்கவேண்டும் என்கிற கேள்விக்கணைகள் கிளம்பிவிட்டன — டில்லியையே ஆட்டிப்படைக்கும்ளவுக்கு வளர்ந்தும் வருகின்றன!!

*

அசாமில் வாழும் பரம்பரைக் குடிமக்களை **மலைகளில் வாழ்பவர்கள்—உள்நாட்டில் வசிப்பவர்கள்** என்று இருவிதமாகப் பிரிக்கலாம். மலைகளில் வாழ்வோரின் தொகை கிட்டத்தட்ட 12-இலட்சம் இருக்கும்! **நாகர்கள்—காசிகள்—மிஷ்மிகள்—அபோர்—டப்ளாக்கள்**—எனும் பெயர் கொண்ட பிரிவினர்கள் இவர்கள்!!

உள்நாட்டில், **கரோ—மிகிரி—ரபா—மீரி—லாலுங்—கச்சாரி** என்று அழைக்கப்படும் ஆதிக்குடிகள் வசிக்கிறார்கள். இவர்கள் தொகை 7-இலட்சம் இருக்கும். வெவ்வேறு விதமான மொழிகளைப் பேசினாலும், பழக்க வழக்கங்களில் பல்வேறுவித மாற்றங்களிருந்தாலும், இந்த ஆதிக் குடிகளுக்கிடையே ஒரு பொதுப் பாசம் நிலவுகிறது. அதிலும், நாகர்போன்ற மலைவாசிகளிடம் அதிக பாசம் இருக்கிறது. ஆறுகளும், அடர்ந்த காடுகளும், மலைவாசி மக்களைப் பிரித்திடினும், வியாபாரமும் வேண்டிய பொருள்களை வாங்கவேண்டிய அவசியமும் ஒரு தொடர்பை உண்டாக்கிவந்தாலும், மலைவாசிகள், தனித்தே வாழவேண்டுமெனும் தணியாத ஆர்வமுடையவர்களாய் உள்ளார்கள். மூன்று இலட்சத்துக்கு மேற்பட்டோராயிருக்கும் நாகர்கள் நாகநாடு கோரி நடாத்தும் அறப்போர் குறித்து நாடு அறியும். இயற்கையிலேயே, தனி உணர்ச்சி கொண்டவர்கள், இவர்கள். இவர்களுக்கு அசாம் சட்டசபையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருந்தும், ஏற்கத் தயாராகயில்லை! எமக்கென ஒரு நாடு வேண்டும்— என்று எக்காளம் எழுப்புகிறார்கள்!! இது, அஸ்ஸாமில் வாழும் உயர்புரியினருக்குப் பிடிக்கவில்லை. அதனால், டில்லிக்கும பிடிக்கவில்லை நாகர்களின் தலைவனான பிஜோவின் தலையைக் கொணர்வோருக்குத் சன்மானம் தரப்படும என்று அறிவித்திருக்கிறது டில்லி. இராணுவங்களைக்கொண்டு குவித்தும், கண்ட கண்ட இடத்தில் சுட்டு வீழ்த்துமாறும், தர்பார் நடத்துகிறது. எனினும், அவர்கள் அஞ்சாமல், அயராமல் போராடிக்கொண்டுள்ளனர்.

அஸ்ஸாம்—நாகநாடு — இரண்டையும் தவிர்த்து, இந்த எல்லை நாட்டில் இன்னொரு பகுதியும் இருக்கிறது. அதுதான் வடகிழக்கு **எல்லை ஏஜன்சி** என்பதாகும். இதை நேபா (NEFA) என்று சுருக்கமாக அழைப்பார்கள். இந்த எல்லையோரம், பாதுகாப்பாகயிருக்க வேண்டுமென்பதால், இதன் நிர்வாகத்தை டில்லியே கண்காணித்து வருகிறது. அசாம் கவர்னரின் மேற்பார்வையில் இந்த அரசு நடக்கிறது. பிரிட்டிஷார் காலத்தில், செய்யப்பட்டிருந்த, இந்த முறை இன்னும் நீடிப்பதை அசாமியரும் விரும்பவில்லை, நேபா பிரதேசத்தினரும் எதிர்க்கிறார்கள். அசாமுடன் இணைக்கப்பட்டு, வாழவேண்டும் என்கிற பெருவிருப்பம் தலைதூக்கி வருகிறது!!

நிலக்கரி உண்டு — ஆனால் தோண்டியெடுக்கப்படவில்லை. **மண்ணெண்ணெய்** கிடைக்கிறது—இலாபம் அடைவதோ வெள்ளைக்காரக் கம்பெனி. **தேயிலை** கிடைக்கிறது—சுரண்டுவதோ, அந்நியக் கமபெனி. **சிமெண்டு** தயாரிப்புக்கான சுண்ணாம்புக் கல் நிறையக் கிடைககிறது—ஆலையோ, அனுமதிக்கப்படவில்லை. சுவை தரும் **கரும்பு** ஏராளம்; ஆலை கிடையாது. நல்ல **மூங்கில்கள்** உண்டு, வருமானம் தர; வெளியிலனுப்ப டில்லியின் தயவு வேண்டும்.

இவ்விதம் வளம் பல இருந்தும் அசாம ஒரு ஆலை நாடாக மாறவில்லை! திராவிடத்தைபபோல், **விவசாயமும்** அதறகு அடுத்தபடியாக **கைத்தறியுமே** முககிய தொழிலாக உளளது. அசாமில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும், தறி சுழலுமாம்! நெய்யத் தெரிந்த பெண்களைத் திருமணம் செய்வதுதான் அங்கு வழக்கமாம்! ஓடும ஆறுகள பல, அவைகளில் ஆண்டு தோறும வரும வெள்ளத்தால் அழியும ஊர்கள அநேகம. இந்த வெள்ளத்தைத் தடுத்து அணையாக்கினால் மின்சாரமும், நீர்ப்பாசன வளமும் செய்யலாமல்லவா? அதற்காக அசாம் அரசாங்கம் திட்டங்கள பல போட்டு **290-கோடி** ரூபாய் வேண்டும் என்று டில்லிக்கு வேண்டுகோள் விடுத்ததாம். ஆனால் டில்லி அறுபதே **அறுபது** கோடிதான் தர இயலும் என்றதாம்!

இப்படி எடுத்ததற்கெல்லாம் முட்டுக்கட்டை போடும் முறையில் டில்லி நடந்து கொள்வதைக் கண்டு, அசாம் மக்கள் போர்க்கோலம் பூண்டிருக்கிறார்கள், **எண்ணெய்சுத்திகரிப்பு** ஆலைக்கும் டில்லி மறுப்பு விடுத்தது, அவர் தம் உள்ளத்தை எரிமலையாக்கி விட்டது.

இப்போது அங்கே ஆட்சி புரிவது காங்கிரஸ் கட்சிதான். என்றாலும், கடந்த தேர்தலின்போது இருந்த நிலைக்கும் இப்போதுள்ள நிலைமைக்குமிடையில், ஏராளமான வித்தியாசங்கள் உண்டு. எதிர்க் கட்சிகள், அசாமில் நாளொரு மேனியாக வளர்ந்துகொண்டே உள்ளன! டில்லிதான்—அவர்க

ளது, கண்டனக் குரலில் உள்ளது. இந்த எதிர்க் கட்சிகள் யாவும், எண்ணெய் ஆலை பிரச்சினையில் ஒன்று சேர்ந்து போராடுகின்றன —டில்லியின் ஓரவஞ்சனை ஒழிக! எனும் பெருமுழக்கம், எழும்புகிறது." **"இந்தியாவிலிருந்து துண்டிக்கப்பட்டு வாழும்படி நேரினும், நாங்கள் தயாராயிருக்கிறோம். இந்த அக்கிரமத்தைப் பொறுக்க முடியாது,"** எனும் குரலொலி, கேட்கிறது.

இதைக் காணும் காங்கிரஸ்காரர்களும், டில்லிக்கு ஓடிவந்தார்கள். கெஞ்சினார்கள்—பயன் தராமற் போகவே, "ராஜினாமா செய்யும் காங்கிரஸ் மந்திரி சபை," என்று மிரட்டினார்கள். அதுவும் பலன் தரவில்லை—"ஐயோ! எதிர்கால அசாமில் எமக்கு இடமில்லாமற் போய்விடுமே," என்று அஞ்சுகிறார்கள், காங்கிரஸ்காரர்கள். அண்மையில் காங்கிரஸ் முதன் மந்திரி விஷ்ணுராம் மேதி ஒரு கூட்டத்திற்குச் சொற்பொழிவாற்றச் செல்ல, மக்கள் தடுத்துத் திரும்பிப் போகும்படிச் செய்திருக்கிறார்கள்.

அந்தளவுக்கு அசாமில், டில்லியின்மீதும் அதற்குத் தலை வணங்கும் காங்கிரசாட்சியின்மீதும் ஆத்திரம், அலைமோதுகிறது.

அஸ்ஸாமில் ஆத்திரம்—நாகர்கள் நாட்டில் அருவருப்பு—நேபாவில் எழுச்சி. இந்த நிலையிலிருக்கிறது, கீழ் எல்லை.

இதனை, தமது புன்சிரிப்பால் மடக்கிடலாம் என்று நேரு அவர்கள் எண்ணிவந்தார். நினைப்பு பலன் தராது என்பதை நிகழ்ச்சிகள், காட்டுகின்றன! கீழ் எல்லை, கிளர்ச்சிகள் காடாகி வருகிறது.

★

4-ம் பக்கம் தொடர்ச்சி

கூட்டத்திலே இருப்பவர்கள் நகரப் புறத்தைச் சேர்ந்தவர்கள். என்ன நடக்குமோ என்ற நினைப்போடு இருப்பவர்களை நீங்கள் பார்த்தால் அவர்கள் எல்லாம் கிராமத்து மக்கள். வெள்ளை வேட்டியோடு இருப்பவர்கள் எல்லாம் நகரத்து மக்கள். இன்றைய தினம் மட்டுமாவது வெள்ளை வேட்டி கட்டிக் கொள்ளலாம் என்ற வேதனையோடு இருப்பவர்கள் கிராமத்து மக்கள். அவர்கள் வாழுகின்ற ஊர் நாட்டினுடைய முதுகெலும்பு என்பது தங்களுக்கு நன்றாகத் தெரிந்த ஒன்று. அவர்கள் தங்களிடத்திலே அபாரமான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்" என்று கூறினார்கள்.

இருவேறு அரசியல் தலைவர்கள் இணைந்து ஒரு மாநாட்டில் இருப்பதை மக்கள் வியப்போடும் புதுமையாகவும் கண்டுகொண்டிருந்தார்கள்.

கிராமத்து மக்களை யாரும் கை தூக்கி விடாததால் இன்று அவர்களுக்கு அரசியலிலேயே ஒரு வகைச் சலிப்பு தோன்றியிருக்கின்றது என்பதைப் பற்றிக் கூறும்போது அண்ணா தேர்தல் காலத்தில் தாம் கண்டதை எடுத்துக் கூறினார்,

"இந்தத் தொகுதியிலே நான் ஓட்டு கேட்க வந்த நேரத்தில் கிராம மக்களிடையே நான் மூன்று மனப்பான்மைகளைக் கண்டேன்.

ஒன்று தேர்தலிலேயே கிராமத்து மக்களுக்கு இன்றைய தினம் வரவர சலிப்பு அதிகமாகி இருக்கிறது. யார் பதவிக்கு வந்தாலும் தங்களை யாரும் கை கொடுத்துத் தூக்குவதில்லை. எவர் வந்தாலும் இதைச் செய்வோம் அதைச் செய்வோம் என மளமளவென வரமளிக்கிறார்களே தவிர நம்முடைய நிலைமைகளை மேன்மையுறச் செய்கின்றவர்கள் யாருமில்லை என்ற சலிப்புணர்ச்சியினால் எங்களிடத்திலே எதற்காக வாக்கு கொடுத்தீர்கள்? ஏன் ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை தொல்லை தருகின்றீர்கள் என்று கேட்கின்ற அளவுக்குச் சலிப்புணர்ச்சி இருப்பதை கிராமப் புறங்களில் நான் கண்டேன்.

இரண்டாவதாகக் கிராமங்களில் உள்ள ஒரு மனப்பான்மை நாட்டை ஆளுகின்ற சர்க்கார் எந்தக் கட்சியினாலே நடத்தப்பட்டாலும் அது பெரும் பகுதி நகரத்திற்குத்தான் பயன்படுகின்றதே தவிர நாட்டுப் புறங்களுக்குப் பயன்படவில்லை என்ற ஒரு எண்ணம் இருக்கிறது.

மூன்றாவதாக அவர்களிடையே இருக்கிற ஒரு எண்ணம் எங்களுக்காகச் செய்யப்பட வேண்டிய ஒரு செயலை எங்கோ இருப்பவர்கள் தீர்மானிப்பதை விட நாங்களே தீர்மானித்து, எங்களிடத்திலே அதற்கான வழி வகைகளைத் தந்து வசதிகளைச் செய்து கொடுத்தால் நாங்கள் அதைவிடத் திறமையாகச் செய்து முடிப்போம் என்று சொல்லத்தக்க மனப்பான்மை இருப்பதை நான் கண்டேன்."

என்று விளக்கி 'இந்த மூன்று மனப்பான்மையும் மக்களாட்சிக்குத் தேவையான மனப்பான்மைகள், இவைகள் எல்லாம் அதிருப்தியிலே விளைந்தவை என்று மட்டும் தள்ளிவிடுவதற்கில்லை.'

என்பதையும் எடுத்துக் காட்டினார்கள். காமராசர் தமது பேச்சில் இந்தக் கருத்தை ஒட்டி,

சுயராஜ்யம் என்று சொன்னால்—மகாத்மாகாந்தி கேட்ட சுராஜ்யத்துக்கு—யாரோ பட்டணத்திலேயோ, டெல்லியிலேயோ பத்துப்பேர் ராஜாங்கம் நடத்துகின்றார்களே அதுவா சுராஜ்யம் அல்ல — உங்களுடைய தேவை என்ன என்று முதலிலேயே புரிந்துகொள்ளவேண்டும்,

என்று கூறி உண்மையான விடுதலை கிராமத்து மக்களுக்குப் பயன்படக் கூடியதாக வேண்டும் என்றார்கள்.

கிராமத்து மக்களின் குறைகளைக் களைய வேண்டும் என்று அண்ணா அவர்கள் முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டார். இது போல் குறைகளைக் களைந்து கொள்ள மூன்று முறைகள் உள்ளன என்று குறிப்பிட்டார்கள். அந்த முறைகளாவன:

ஒன்று: இவ்வளவு குறை இருக்கிறது குறையிருக்கிறது என்று மக்களிடையே அதிருப்தியை மட்டும் கிளப்புவது. இரண்டு: இவ்வளவு குறை இருக்கிறது, ஆகவே கிளர்ச்சி செய்யுங்கள் என்று தூண்டு

வது. மூன்று: இவ்வளவு குறை இருக்கிறது வந்து காணுங்கள் என்று ஆட்சியாளர்களைக் கொண்டுவருவது. நான் மூன்றாவது வழியைப் பின்பற்றி இருக்கின்றேன். இந்த வழி பயன் அளிக்கும் என்று நான் உண்மையிலேயே நம்புகின்றேன்.

என்று விளக்கி இதில் அரசியல் பிரச்சினைகள் கொள்கைப் பிரச்சினைகள் ஒன்றுமில்லை என்பதை

எந்தக் கட்சியும் வறுமை நீங்கவேண்டும் அறியாமையைப் போக்கவேண்டும்—கிராமப்புறத்து நிலையை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையில் ஒரு மாதிரியான மாறுபாடும் வைத்துக்கொண்டில்லை''

என்று கூறி 'வருக வருக என்று கிராமத்து மக்கள் சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும்' அண்ணாவின் 'சொந்தச் சார்பிலும்' கர்மராசரை வரவேற்றார்கள்.

பின்னர் தண்டலம் கிராமத்தினர் சார்பில் திரு. நடராச (முதலியார்) அவர்கள் முதலமைச்சருக்கும் அண்ணாவுக்கும் வரவேற்பு இதழ் படித்தளித்தார். பரந்தூர் பிர்க்கா விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் தோழர் பூஞ்சோலை முதலமைச்சருக்கு ஒரு வரவேற்பிதழ் அளித்தார்.

பல அமைப்புக்களின் சார்பிலும் கிராமங்களின் சார்பிலும் மலர்மாலைகள் மேடையில் வந்து குவிந்தன.

இந்த நேரம் பார்த்து மக்கள் எல்லோரும் அண்ணாந்துமேலே பார்த்தார்கள். இருண்டவானம் இனிய மழைத் துளிகளை வழங்கத் தொடங்கியது. அதையும் தாங்கிக்கொள்ளும எண்ணத்துடன் மக்கள் கலையாமல் இருந்தனர் என்றாலும் மாநாட்டு நிகழ்ச்சிகள் தடைப்படுமோ என்று எண்ணிடுவதுபோல் சற்று நேரம் இருந்தது.

காமராசர் அவர்கள் கூட மழையில் நனைந்துகொண்டு நின்ற மக்களைக் காக்கவைக்கவேண்டாம் என்று ''நான் இன்னொரு சமயம் வருகின்றேன். இங்கு உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி'' என்று சொல்லிமுடித்தாரோ இல்லையோ மழையும் நின்றது.

உடனே மக்கள் மகிழ்ச்சிப் பேரொலிசெய்து தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளை ஆவலுடன் எதிர்நோக்கினர்.

வரவேற்புக்குப் பதில் உரைக்கும்போது முதலமைச்சர் அவர்கள் தம்மை அழைத்ததற்குநன்றி தெரிவித்து நாட்டிலே உள்ள குறைகளைக் களையவேண்டிய கின் அவசியத்தை எடுத்து விளக்கினார்.

உங்களுடைய மகசர்—பல கிராமங்களிலிருந்து வந்திருக்கின்றீர்கள் அதைக் கொடுத்திருக்கின்றீர்கள். அதை நான் இன்னும் படித்துப் பார்க்கவில்லை. ஆனால் போனஉடன் படித்துப் பார்க்கப்போகின்றேன்.

என்று நம்பிக்கை எழப் பேசினார்கள்.

தேசிய வளர்ச்சித் திட்டத்திலும் சமுதாய நலத் திட்டத்திலும் மக்கள் ஒத்துழைத்து முன்னேறவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டு, ''நம்முடைய நாட்டிற்கே பெரிய குறை பெரிய வித்தியாசம். ஜாதி போன்றவற்றின் பேரால் வித்தியாசங்களை நம்முடைய சமுதாயத்திலிருந்து அப்புறப்படுத்தவேண்டும்'' என்று கூறினார். பிறகு மக்களுடைய நலனுக்குப் பாடுபடுவதில் அரசியல் கட்சி வேறுபாடுகள் இருப்பதற்கில்லை என்றும் கூறினார்.

அண்ணாத்துரை அவர்களோ நானோ குறுக்கே மறுக்கே பேசிக்கொண்டே இருக்கலாம்—அசம்பிளியிலே பேசலாம்—வெளியிலே பேசலாம்—அரசியல் மேடைகளிலே பேசலாம்—இதைப்போன்ற காரியங்களில் ஒருவருக்கொருவர் வேறுபாடோ மாற்றுஎண்ணங்களோ இருக்க முடியாது. ஆகவே எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

என்று கேட்டுக்கொண்டு தம் உரையை முடித்தார்.

பின்னர் காஞ்சி நகர மன்றத் துணைத் தலைவர் **அ. க. தங்கவேலர்** நன்றி நவின்றார். காஞ்சித் தொகுதியை நன்கு கவனித்துப்பார்த்து ஆவன செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மாநாடு முடிவதற்காகக் காத்துக்கொண்டு இருந்ததைப்போல் வானம் மீண்டும் தண் துளிகளைப் பொழியத் தொடங்கியது.

பிசுபிசுவெனத் தூற்றல் இருந்தும் மாநாட்டிற்கு வந்தவர்கள் அனைவருக்கும் விருந்தளித்து வழியனுப்பி வைத்தனர் தண்டலம் கிராமத்தினர்.

தோழர்கள் காஞ்சி நகர மன்றத் தலைவர் வி. என். பெருமாள் நாயுடு, ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. செங்கற்பட்டு மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வி.எஸ், பாலசுந்தரம், அவர்களும் உள்ளூர் காங்கிரஸ் தோழர்களும், தி. மு. கழக முக்கியஸ்தர்கள் அரங்கண்ணல், சி. வி. எம். அண்ணாமலை, பாபு, வெங்கடேசன் சீனுவாசன், பூஞ்சோலை, சபாபதி ஆகியோரும் உயர்தர உத்தியோகஸ்தர்களும் வந்திருந்து மாநாட்டைச் சிறப்பித்தனர்.

மாநாட்டிற்கான வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்களுக்கெல்லாம் 'வெற்றியோடு முடித்தோம்' என்ற பெருமிதமும் நிம்மதியும் ஏற்படவும், எதிர்க் கட்சிக்காரர்கள்கூட செயலாற்ற முடியும் என்ற எண்ணம் தொகுதி மக்களுக்கு வரவுமாக மாநாடு நன்முறையில் நடைபெற்றது.

★

தமிழும் சிங்களமும் இலங்கையின் சொந்த மொழிகளாகும். சிங்கள மொழியினைப் பற்றிய அறிக்கையினை நீங்கள் முன்னர்க் கேட்டீர்கள். தமிழ் மொழியினைப் பற்றிய அறிக்கையினை இப்பொழுது யான் உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். ஆங்கிலத்திலுள்ள எனது அறிக்கையினை வாசித்தற்குமுன் என் தாய் மொழியாம் தமிழினுஞ் சில கூற விரும்புகிறேன். இங்கு, எனக்கு முன் பேசிய அறிஞர்கள் பலர் தங்களுடைய தாய்மொழிகளிலும் பேசி அவற்றைக் கேட்கும் வாய்ப்பினை எமக்கு அளித்துளர். ஆகையால், தமிழைக் கேட்கும் வாய்ப்பினை உங்கள் எல்லோருக்கும் அளித்தல் என் உரிமையாகவும் கடமையாகவும் உளது. 'தமிழ்' என்னும் சொல்லின் கருத்தே இனிமை என்பதாகும். எனவே, எனது இனிய தாய்மொழியிற் சில நிமிடநேரம் பேசுகின்றேன்.

"இந்த உலகிலே ஈராயிரத்துக்கு மேற்பட்ட மொழிகள் வழங்கி வருகின்றன. இவற்றுள்ளே மிகப் பழைய மொழிகள் சிலவே. இவற்றுள் ஒன்ருகத் தமிழ்மொழி விளங்குகிறது. இன்று பேச்சு வழக்கிலுள்ள மொழிகளுள்ளே மிகுந்த பழமையுடையது தமிழ் மொழியேயாகும்.

இம்மொழி இந்தியாவிலும் இலங்கையிலும் மாத்திரமன்றி மலாயா, பர்மா, தென்னுபிரிக்கா, பீச்சித்தீவு, மொறிசியசு முதலிய நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றது. இதனால், ஆசிய மொழிகளுள் மிகத் தொகையான நாடுகளில் வழங்கும் மொழி தமிழாகவே அமைந்துளது.

பல்லாயிர ஆண்டுகளாக நாகரிகத்துடன் வாழ்ந்த தமிழ் மக்கள், மனித குலம் போட்டி பொருமைகளின்றியும் பூசலும் போருமின்றியும் வாழுதற்குரிய வழிகளை நன்கறிந்திருந்தனர். இபபொழுது கிடைக்கும் நூல்களுளளே மிகுந்த பழைமையுடையனவாகிய சங்க நூல்களிலே இந்த வழிகள் சிறப்பாக விளக்கப்பட்டுள.

தம் நலங்கருதாமற் பிறர் நலத்துக்காகப் பாடுபடுபவர்களே மக்களுள் உயர்ந்தவர்கள்—சான்ரேர் என இந்நூல்கள் கூறுகின்றன. பகுத்துண்டு பல்லுயிரையுங் காக்கும் உயர்ந்த பண்பாட்டை உடையவர்களாக வாழத் தமிழ்மக்கள் முயன்றனர். பெற்ற தாயின் பசியைத் தீர்த்தற்குத் தானும் சான்ரேர் பழிக்குஞ் செயல்களைச் செய்யாமல் வாழல் வேண்டும் எனும் பெருநோக்கமுடையவர்களாக அவர்கள் வாழ்ந்தார்கள். தீமை செய்பவருக்கும் நன்மை செய்தல் வேண்டும் எனும் உயர்ந்த கொள்கையையும் அவர்கள் உருவாக்கினர். பாடுபட்டு உழைத்துப் பொருளைச் சேர்த்தவன், அதனைத் தக்கார் பலருக்குக் கொடுத்து வாழுதல் வேண்டும் எனும் பொது உடைமைக் கருத்தும் தமிழ் மக்களிடையே நிலைத்து விளங்கியது.

மிக மிகப் பழைய காலந் தொடக்கந் தமிழ் மக்கள் இலங்கையிலே வாழ்ந்து வருகிருர்கள். புத்தர் பெருமான் இலங்கைக்கு வந்த வரலாற்றுடனேதான் இலங்கைச் சரித்திரம் தொடங்குகிறது. அவர் இலங்கைக்கு மூன்றுமுறை வந்தார் என்று கூறுகின்றனர். இலங்கையின் வடபகுதியை ஆண்டுவந்த நாகர் குல அரசர்கள் இருவரிடையே ஏற்பட்ட பகையைத் தீர்ப்பதற்காகவே அவர் இரண்டாம் முறை இலங்கைக்கு வந்தார். இது, விசயன எனும் அரசகுமாரன் இலங்கைக்கு வருவதற்கு முன் நிகழ்ந்ததென, மகாவமிசம் எனும் நூல் கூறுகிறது.

இலங்கையின் வடபகுதி அக்காலத்தில் நாகதீபம் என வழங்கப்பட்டது. நாகதீபத்தில் வாழ்ந்த மக்கள் தமிழ் மொழியையே பேசினர்கள். கி. மு. இரண்டாம நூற்ருண்டுக்கு முன தோன்றிய சங்க நூல்களிலே இலங்கையைப் பற்றிய குறிப்புக்கள் பல உள. கடைச் சங்க நூல்களிலே ஈழத்துப் பூதன்றேவனர் பாடிய பாடல்கள் காணப்படுகின்றன. ஈழத்துப் பூதன்றேவனர் வடஇலங்கையிலிருந்து மதுரை சென்று சங்கப் புலவராகிச் சிறப்பெய்தினர்.

மணிமேகலை எனும் பௌத்தக் காப்பியத்திலும் யாழ்ப்பாணத்தையும் இலங்கையின் வடபகுதியையும் பற்றிய செய்திகள் உள. மணிமேகலை மணிபல்லவத்துக்கு வந்த செய்தி யாவரும் அறிந்ததொன்று. மணிபல்லவம் என்பது நாகதீபமேயாகும். கி.மு. இரண்டாம்நூற்ருண்டுத் தொடக்கம் தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் நெருங்கிய இலக்கியத் தொடர்பு ஏற்பட்டு நிலைத்தோங்கியது.

இலங்கைத் தமிழர்கள் கி. மு. ஆரும் நூற்ருண்டுத் தொடக்கம் பிற நாட்டார் இலங்கையை ஆட்சிப்படுத்துங் காலம்வரையும் 17-ஆம் நூற்ருண்டு வரையும் தனியாக நடத்தினர். 13-ஆம் 14-ம் நூற்ருண்டுகளில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் இலக்கிய இலக்கண நூல்களை மாத்திரமின்றி மருத்துவம், சோதிடம், கணிதம் முதலியன பற்றிய நூல்களையும் இயற்றியுள்ளனர். யாழ்ப்பாணத்திலே 'சரசுவதி மகாலயம்' எனும் பெயருடைய நூல்நிலையம் ஒன்று இருந்தது. யாழப்பாணத்தில் அக்காலத்திலே நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கத்திலே தென்னிந்தியப் புலவர்களும் பங்கு

பற்றியுள்ளனர். 15-ம் நூற்றாண்டிலே அரசகேசரி என்னும் இளங்கோ காளிதாசர் இயற்றிய இரகு வம்சத்தைத் தமிழிலே பன்னயங்களும் மிகக் காவியமாக்கினார். இதற்கு இணையான மொழிப்பெயர்ப் பொன்றேனும் இதுவரை தோன்றவில்லை.

பத்தாம் பதினோராம் நூற்றாண்டுகளிலே சோழ மன்னர்கள் இலங்கையை ஆண்டனர். இவர்கள் ஆட்சியிலே தமிழ் மொழியும் தமிழ்க் கலையும் இங்கை எங்கும் பரவிச் சிறந்தன. சிங்கள மொழியையும் சிங்களக் கலாச்சாரத்தையும் தமிழ்மொழி வளம் படுத்திற்று. சிங்கள மன்னர்களின் அரண்மனை மொழியாகவும் தமிழ் இடையிடையே வழங்கியது. கடைசியாகக் கண்டியை ஆண்ட மன்னர்களின் காலத்திலும் தமிழ் அவர்களுடைய ஆட்சி முறையிலே நல்லிடம் பெற்றிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் பின்னரும் தமிழ் மொழி பல துறைகளிலே புத்துயிர் பெற்று விளங்கிற்று. தமிழ் அகராதிகள பல யாழ்ப்பாணத்திலே ஆக்கப்பட்டன.

பேரறிஞரும் சீர்திருத்தச் செம்மலுமாகிய ஆறுமுக நாவலர் சிறந்த தமிழ் நூல்கள் பலவற்றைப் பதித்து வெளியிட்டார்; அவர் எழுதி வெளியிட்ட உரைநடை நூல்கள் பலவாகும். கிறித்தவர்களுடைய விவிலிய நூலையும் தமிழிலே மொழி பெயர்த்தார். இக்காலத் தமிழ் உரை நடையின் தந்தையாக அவரைத் தென்னிந்தியத் தமிழ்ப் புலவர்களும் கொண்டாடுகின்றனர். இவரைப் பின்பற்றி இவர் செய்த அரும் பெரும் பணிகளைத் தமிழ்ப் பேரறிஞர்கள் தமிழ் இலக்கியத்துக்குச் செய்துள்ள தொண்டுகளும் ஆக்கிய நூல்களும் பலவாகும்.

தமிழிலே முதன் முதலாகக் கலைக் களஞ்சியத்தை ஆக்கியவர் ஐம்பது ஆண்டுகளுக்குமுன்னர்க் காலஞ்சென்ற முத்துத் தம்பிப் பிள்ளை எனும் யாழ்ப்பாணத்தவர் ஆவார். தமிழ் இசையின் நுணுக்கங்களை விளக்கி, யாழ் எனும் இசைக் கருவியின் அமைப்பை ஆராய்ந்து நிறுவிய, விபுலானந்த அடிகள் "யாழ் நூல்" எனும் நூலை எழுதினார் சோமசுந்தரப் புலவர் பல்லாயிரக் கணக்கான சிறந்த பாடல்களைப் பாடிப் புகழ் பெற்றார்.

இந்தியத் தமிழகத்துடன் சேர்ந்தே இலங்கையிற் தமிழ் மொழி வளர்ந்து வருகிறது. இலங்கைத் தமிழறிஞர்களுடைய பெரும் பணிகளால் இரு நாட்டாரும பயன் பெற்றுள்ளர்.

எனது பேச்சை முடிப்பதற்கு முன் உலகப் புகழ்பெற்ற தமிழ் மறையாம் திருக்குறளைப்பற்றியுஞ் சில கூற விரும்புகிறேன். "இந்நூலிற் கூறப்படுவன போன்ற சிறந்துயர்ந்த அறிவுரைகள் உலகத்திலுள்ள இலக்கிய நூல்கள் வேறொன்றுங் கூறப்படவில்லை" என, அல்பேட்சுவைச்சர் எனும் பேரறிஞர் கூறியுளர். இந்நூல் இருபதுக்கு மேற்பட்ட மொழிகளில் — ஆசிய மொழிகளிலும் ஐரோப்பிய மொழிகளிலும் — மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இஃது இன்னும் மொழி பெயர்க்கப்படாத மொழிகளில் இதனை மொழி பெயர்க்குமாறு அவைபர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய இப் பெருநூல் அரசியற்றலைவர்களிலும் புலவர்களே — எழுத்தாளர்களே — ஆற்றல் மிக்கவர்கள் என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கிறது. இத்தகைய ஆற்றல் வாய்ந்த எழுத்தாளர்கள் ஒன்றுபட்டால் உலகத்திலே அன்பும் அமைதியும் இன்பமும் நிலைத்தற்கு வழி கோலும். எனவே ஆசிய எழுத்தாளர்களையும், உலகின் ஏனைய நாடுகளின் எழுத்தாளர்களையும், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் கண்ட "**யாதும் ஊரே யாவரும் கேளிர்**" என்ற ஓருலகக் கொள்கையை நிலைநாட்டுதற்கு ஒன்றுபட்டு உழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

"செ. த. செல்வி"

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

இயலாது? **மனமும், மாசற்ற உள்ளமும், மனித உருவங்கள் எத்தகையதாயினும் அவைகளை மதிக்கும் பண்பும் இருந்தால் எந்தக் குறைகளுக்கும் பரிகாரம் தேடலாம்.**

குறைகளைக் களைந்து மக்களை நிறைவுடையோராக்கும் கூட்டத்தில்தான, நாடு, இன்றையதினம் உள்ளது. கூறிக்கொள்ளுகிறார். இருந்தும் என்ன நேர்ந்தது, இன்று!!

குறைகள், தீர்க்கப்படவில்லை !

மாறுக, புதியதோர் அம்பு, கிளம்புகிறது !!

தபால் தந்தி சிப்பந்திகளையும் இரயில்வே, விமானத் துறை போன்ற ஏனையதுறைச் சிப்பந்திகளையும் மிரட்டும், ஒரு மசோதா, பார்லிமெண்ட் முன் வந்து, பலத்த கண்டனங்களுக்குப் பிறகு சட்டமாகியிருக்கிறது.

"இன்றியமையாத துறையினர்," எனும் மகுடம் சூட்டப்பட்டு அவர்கள் இப்படிப்பட்ட வேலை நிறுத்தம் போன்றவைகளில் ஈடுபடுவார்களானால், அவர்களைத் தண்டிக்கலாம், என்பதுதான் இந்தப் புதிய சட்டம். வேலை நிறுத்தம் செய்பவர்கள் மட்டுமல்ல, அவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பவர்களையும் பிடித்துக்கொண்டுபோய்ச் சிறையில் தள்ள வழி செய்கிறது, இச்சட்டம்.

கேட்பதோ வாழ்வு ! கிடைப்பதோ மிரட்டல் !!

இதனை, நலம் விரும்பிகளும் சரி, நல்லாட்சி நாடுவோரும சரி, ஒரு சிறிதும் ஒப்பார். இவ்விதம் பாடுபடுவோரின் குரலை அடக்க முனைவது முலாளித்துவ முறை. அதே முறையினை, காங்கிரசாட்சியும் பின்பற்றுவது, வெட்கமும், துக்கமும் நிரம்பிய செயலாகும். உண்மையிலேயே, வேதனைப்படுகிறோம்— விபரீதபுரிக்கு, ஆட்சியினர், வழியமைக்கின்றனர், வெகுநாட்களுக்கு இந்த ராஜ தர்பார் நீடிக்க இயலாது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஏழையின் குரல் எப்போதும் வெல்லும்! அதட்டலும் மிரட்டலும் என்றும் வாழ்ந்ததில்லை!! ஒழிக, அடக்கு முறைச் சட்டம். அழிக, ஆதிக்க ஆணவம்.